# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 32 சோபகிருது வருடம், ஆடி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை

(04.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 16, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## வேலை என்றால் சஜித்துக்கு பயம்



### அமைச்சர் மனுஷ கூறுகிறார்

02 பக்கம்

## தேசிய மீலாத் விழா இம்முறை மன்னாரில்

எம்.எஸ்.எம்.ஸாகிர்

தேசிய மீலாத் விழாவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் ஆலோசனைக்கமையவே, தேசிய மீலாத் விழாவை மன்னார் மாவட்டத்தில் கொண்டாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 02 பக்கம்

# பொலிஸ் அதிகாரத்தை நீக்குங்கள்!



## 13ஆவது திருத்த யோசனைக்கு எதிராக உதய கம்மன்பில உத்தேச சட்டமூலம் சமர்ப்பிப்பு

நமது நிருபர்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களை நீக்கி மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களை முற்றாக இல்லாதொழிக்கும் வகையிலான 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பிவித்திரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவால் பாராளுமன்றத்துக்கு நேற்று (03) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தச்சட்டமூலத்தை பாராளுமன்ற பதில் பொதுச் செயலாளர் ஹன்ச அபேரத்னவிடம் கம்மன்பில எம்.பி. கையளித்துள்ளார்.

அவர் கையளித்துள்ள உத்தேச சட்டமூலத்தில் பொலிஸ் அதிகாரம்... 02 பக்கம்

## சுழிபுரம் முருகன் ஆலயம் சிங்கள மயமாக்கப்படுகிறதா?



### வர்த்தமானி வெளியீட்டால் மக்கள் அச்சம்

யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணம் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள நூற்றாண்டு பழமைவாய்ந்த அரச மரம் சங்கமித்தையுடன் தொடர்புடையது என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அரச மரம் தொல்பொருள் சின்னமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அரச மரத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் ஆக்கிரமித்து, புத்தர் சிலைகளை நிறுவி,... 02 பக்கம்

## சட்டத்தை திருத்த முயற்சிக்க வேண்டாம்

### சுகாதார தொழிற்சங்கங்கள் கோரிக்கை

சுகாதாரத்துறைசார் சட்டங்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, சேவையை மேலும் வலுவாக்குவது அவசியமாகும். இருந்தபோதும், சட்டங்களில் அரசாங்கம் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள மாற்றங்கள் தற்போதுள்ள பிரச்சினைகளை மூடி மறைக்கவோ அல்லது புதிய சிக்கல்களை உருவாக்கும் வகையிலோ இருந்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எனவே, எந்தவொரு கலந்தாலோசிப்பும் இல்லாமல் சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய சட்டங்களை திருத்த முயற்சிக்க வேண்டாம் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



கேஸ் விலைய போன மாதம் குறைக்கிறாங்கள்... இந்த மாதம் கூட்டுறாங்கள்... இதுக்கு பேசாமல் குறைக்காமல் இருந்திருக்கலாமே ?

## எரிவாயுவின் விலை அதிகரிக்க தீர்மானம்

### அறிவிப்பு இன்று வெளியாகும்



உலக சந்தையில் எரிவாயுவுக்கான விலை அதிகரித்துள்ள நிலையில், அதனை ஈடுசெய்யும் வகையில் சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க லிட்ரோ எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, விலை மறுசீரமைப்பு செய்து எரிவாயுவுக்கான புதிய விலையை இன்று (04) அறிவிக்கவுள்ளதாக அந் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## அமைச்சர் அலி சப்ரி ஈரானுக்கு பயணம்



ஈரானின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹொசைன் அமீர் அப்துல்லாஹியனின் அழைப்பையேற்று, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி இன்று(04) உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஈரானுக்கு செல்லவுள்ளார்.

இன்றிலிருந்து எதிர்வரும் 07ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து அந்நாட்டு அரசாங்கத்துடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின்போது, ஈரான்... 02 பக்கம்

## ஐ.தே.கவில் மீண்டும் இணைகிறார் மயோன்

சாய்ந்தமருது செய்தியாளர்



முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளார் என அறியமுடிந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர்... 02 பக்கம்

## அமைச்சர் ஹாபிஸுக்கு செந்தில் நோட்டீஸ்





சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட்டிடம் 25 கோடி ரூபா (250 மில்லியன்) நட்டஈடு கோரி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டிஸ் அனுப்பியுள்ளார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நசீர் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்பில் பொய்யான கருத்துகளையும் அரச தொழில் இடமாற்றங்கள்... 02 பக்கம்

## நீர்க்கட்டணத்தை உயர்த்தி மக்களை ஒடுக்கும் அரசாங்கம்



### வாழும் உரிமை மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

நாட்டு மக்களை சில தந்திரங்களால் ஏமாற்றி நீர்க்கட்டணத்தை 50 சதவீதத்தால் அதிகரிப்பது மக்களை ஒடுக்கும் தன்னிச்சையான செயலாகும். மக்களின் தோள்களில் சுமையை ஏற்றி எவ்வாறு நாட்டை கட்டியெழுப்ப முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (03) தேசிய சேமிப்பு வங்கியின்... 02 பக்கம்

## ரணிலுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஹரின் கோரிக்கை



நெருக்கடியிலிருந்து நாட்டை மிட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொரு வாய்ப்பை வழங்கவேண்டும். அதற்கு நாங்கள் ஒத்துழைப்போம். ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இன்னும் ஐக்கிய தேசியக் கட்சியை... 02 பக்கம்





**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பிக்கள் சிலரும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.**

**ரணிலின் தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியை அமைக்க ஏற்பாடுகளை செய்துவரும் நிமல் லான்ஸாவின் தலைமையில் இந்த பேச்சு நடந்துள்ளது. பெசிலுக்கு மிக நெருக்கமாக இருந்த எம்.பிக்கள் சிலரும் இதில் கலந்துகொண்டதாக தகவல்.**

## பல்கலை பேராசிரியர்கள் 600 பேர் ஆறு மாதங்களில் வெளியேற்றம்

நா. தினுஷா

அரசாங்கத்தின் வரிக்கொள்கையினால் கல்வி நிபுணர்கள் துறையைவிட்டு வெளியேறிவருவதாகவும் இதுவரையான ஆறு மாத காலப் பகுதியில் மாத்திரம் 600 வரையான பேராசிரியர்கள் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும், பல்கலைக்கழகங்களில் 04 ஆயிரத்துக்கும் அதிக எண்ணிக்கையில் விரிவுரையாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முதலாவது வரி மறுசீரமைப்பு நடவடிக்கை முடிவடைகிறது. 02 பக்கம்

## ரூ. 900 பில்லியன் கடனில் இயங்கும் வடிகாலமைப்பு சபை

### அதனை நிவர்த்திக்கவே நீர்க்கட்டணத்தை அதிகரித்ததாக தெரிவிப்பு





நா. தினுஷா

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் செயற்பாடுகளுக்காக மொத்தம் 900 பில்லியன் ரூபா கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கடன்தொகைக்கான தவணைப்பணம் மற்றும் வட்டியாக வருடாந்தம் திறைசேரிக்கும் தேசிய வங்கிகளுக்கும் 32 பில்லியன் ரூபா செலுத்துவதாக அந்தச் சபையின் பிரதி பொது முகாமையாளர் (வணிகம்) பியால் பத்மநாத தெரிவித்தார்.

எனவே, இதற்கான செலவின் ஒருதொகுதியை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த நீர்க்கட்டண அதிகரிப்பு... 02 பக்கம்

## பொலிஸ் அதிகாரத்தை...

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டால் அதன்மூலம் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக தேசிய பொலிஸ், மாகாண பொலிஸ் என்ற இரு பிரிவுகள் உருவாகி நாட்டில் பல்வேறு குழப்பநிலை உருவாகும். எனவே, தேசிய பாதுகாப்பை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான ஏற்பாடுகளே 13ஆவது திருத்தத்தின் பொலிஸ் அதிகாரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் தொடர்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் 155அ பிரிவை உருவாக்கி அந்த ஆணைக்குழு, தேசிய ஆணைக்குழுவாக பெயரிடப்பட வேண்டுமென கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

## ரூ. 900 பில்லியன்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று (03) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இந்த ஆண்டுக்கான நீர்க் கட்டண அதிகரிப்பை இம்மாதத்திலிருந்து அமுல்படுத்த திட்டமிட்டுள்ளோம். இந்த நீர்க்கட்டண திருத்தம் சமுர்த்தி பயனாளர்களுக்கு அமுலாகாது. அவர்களுக்கு 2012ஆம் ஆண்டு நீர்க்கட்டணமே செயற்படுத்தப்படும். அதேபோன்று பெருந்தோட்டங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் இந்த கட்டணத்திருத்தம் அமுலாகாது. இவர்களிடம் சமுர்த்திக் கட்டணத்துக்கு ஏற்பவே நீர்க்கட்டணம் அறவிடப்படும். ஆகவே, இதனூடாக சமுர்த்தி பயனாளர்களுக்கும் பெருந்தோட்டங்களை சேர்ந்தவர்களுக்கும் நீர்க்கட்டணம் குறைவடையும்.

03 இலட்சம் வரையில் நீர் விநியோகம் செய்யப்படுகின்றது. இதில் 92 சதவீதமானவர்கள் வீட்டு பாவனையாளர்களாவர். இவர்களில் 62 சதவீதமானவர்கள் 15,000 லீற்றர் அல்லது 15 யுனிட்டுக்கு குறைவாக பயன்படுத்துபவர்களாக இருக்கிறார்கள். 2022ஆம் ஆண்டு நீர்க்கட்டணத் திருத்தத்தில் ஒரு யுனிட்டுக்கு 812 ரூபா அறவிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு 1700 ரூபா வரையில் நீர்க்கட்டணம் அதிகரிக்கும்.

50,000 லீற்றர் அல்லது 05 அலகுகளை பயன்படுத்துபவர்களுக்கான நீர்க்கட்டணம் 50 சதவீதத்தால் அதிகரிக்கும். குறிப்பாக ஓரலகு நீரை உற்பத்தி செய்து பயனாளர்களின் வீடுகளுக்கு கொண்டு சேர்க்கும் வரையில் ஓரலகுக்கு 140 ரூபா வரையில் செலவு செய்கிறோம். ஆனால், அதனைவிட குறைந்தளவு கட்டணமே அறிவிடுகிறோம்.

இதற்கு மேலதிகமாக கடந்த காலங்களில் மின்கட்டணம் அதிகரித்திருந்தது. அதேவேளை, இரசாயனப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கான விலைகளும் அதிகரித்திருந்தன. அதேபோன்று திறைசேரிக்கும் தேசிய வங்கிகளுக்கும் வருடாந்தம் கடன் தவணை மற்றும் வட்டியாக 32 பில்லியன் ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளது. 900 பில்லியன் ரூபா வரையில் கடன் பெற்றுக்கொண்டுள்ளோம்.

## சுழிபுரம் முருகன்...

முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்களிடம் எழுந்துள்ளது.

அதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி பிக்குகள் சிலர் ஆலயத்துக்கு வந்து சென்ற நிலையில் ஆலய அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முனைப்பு காட்டியிருந்தனர். அதற்கு ஆலய பக்தர்கள் மற்றும் ஊரவர்கள் எதிர்ப்பு வெளியிட்டதால் பிக்குகள் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். இந்நிலையிலேயே தற்போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## அமைச்சர் அலி சப்ரி...

ஜனாதிபதி கலாநிதி செய்யத் இப்ராஹிம் ரைசியை மரியாதை நிமித்தம் சந்திக்கவுள்ள அமைச்சர் அலி சப்ரி, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், ஈரான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் ஏனைய சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளுடன் சந்திப்புகளிலும் ஈடுபடவுள்ளார்.

இதேவேளை, ஈரானின் அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் நிறுவனத்தில் அமைச்சர் உரை நிகழ்த்தவுள்ளார்.

## ஐ.தே.கவில் மீண்டும்...

ஊடாக கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை மயோன் முஸ்தபா சாதகமாக பரிசீலித்திருப்பதாக தகவல்கள் தெரிவித்தன.

இதையடுத்து, சில தினங்களுக்கு முன்னர் ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் செயலாளர் பாலித ரங்கே பண்டார தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் கலந்துகொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் கட்சி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், கல்முனை தொகுதியிலும் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தலைமைத்துவம் வழங்க முன்வருமாறு மயோன் முஸ்தபாவிடம் இதன்போது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் பங்குபற்றுதலுடன் கல்முனையில் இடம்பெறவுள்ள கட்சியின் புனரமைப்பு கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்களுடன் சிறிகொத்தாவில் இடம்பெற்ற சந்திப்பிலும் பாலித ரங்கே பண்டார பிரஸ்தாபித்துள்ளார்.

இந்நிலையில் கல்முனையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் மயோன் முஸ்தபாவும் கலந்துகொண்டு, கட்சிப் பணிகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனைத் தொகுதி மத்திய குழு புரைமைப்புக் கூட்டமும் கட்சி செயற்பாட்டாளர்கள் சந்திப்பும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிவாயுவின் விலை...

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலக சந்தையில் எரிவாயுவுக்கான விலை 85 டொலரையும் விட அதிகரித்துள்ளது. இருந்த போதும், உலக சந்தையிலுள்ள விலைக்கேற்ப மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாமல் தீர்மானங்களை எடுக்கவே முயற்சித்து வருகிறோம். எனவே, விலைத்திருத்தம் தொடர்பான அறிவிப்பை இன்று வெளியிடவுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய மீலாத் விழா...

மன்னார் மாவட்டத்தில் எங்கு தேசிய மீலாத் நிகழ்வுகளை நடத்துவது என்பது தொடர்பில் ஆராய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் பைசால் ஆப்தீன் தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்றும் மன்னார் மாவட்டத்துக்கு களவிஜயமொன்றினை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், உலமாக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## அமைச்சர் ஹாபிஸுக்கு

குறித்து பிழையான தகவல்களையும் வெளியிட்டு அவற்றை கிழக்கு மாகாண ஆளுநருடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகளை முழுமையாக நிராகரித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டீஸ் அனுப்பி நட்டஈடு கோரியுள்ளார்.

அத்துடன், இந்த நோட்டிஸ் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்கும் 25 கோடி ரூபா நட்டஈட்டுத் தொகையை கிழக்கு மாகாண பாடசாலை வளர்ச்சிக்கு வழங்குமாறும் இல்லையேல் நசீர் அஹமட் மீது மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் செந்தில் தொண்டமான் எச்சரித்துள்ளார்.

நசீர் அஹமட் வழங்கும் நட்டஈட்டுத் தொகை கிழக்கு மாகாணத்தில் உள்ள 10 முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அந்த பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலையும் இணைத்துள்ளார்.

## வேலை என்றால்...

நா.தினுஷா

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேலை செய்ய பயம்கொண்டவர், பொறுப்புகளை ஏற்க முடியாதவர் என்பதை முழு நாட்டுக்கும் நிரூபித்து காட்டியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் (02) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எங்களை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கியிருந்தார்கள். இந்நிலையில், எங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை கட்சியின் செயற்குழு நீக்கியுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் இருந்த நிலைமைக்கமையவே சஜித் பிரேமதாசவுடன் சென்றிருந்தோம். இறுதியில் சஜித் பிரேமதாச என்பவர் வேலை செய்ய முடியாதவர், வேலை செய்ய பயந்தவர், பொறுப்புகளை ஏற்க முடியாதவர் என்பதை முழு நாட்டுக்கும் வெளிப்படுத்தி விட்டார். இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம்.

எனவே, சகலரையும் ஒன்றிணைத்துக்கொண்டால் மாத்திரமே நாட்டை கட்டியெழுப்ப முடியும். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தற்போதுள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அப்பால், மேலும் பலர் இணைந்துக்கொள்ள காத்திருக்கிறார்கள் என்றார்.

## சட்டத்தை திருத்த...

அந்தச் சங்கத்தின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று (03) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், அநேகமான தீர்மானங்கள் தொடர்பில் இதுவரையில் சரியான தெளிவுகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள எங்களின் நிறைவேற்றுக்குழுவில் தெளிவாக கலந்தாலோசிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதிலுள்ள விடயப்பரப்புகள் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளிடமிருந்து விளக்கத்தை எதிர்பார்க்கிறோம். இருந்தபோதும், தற்போது சுகாதாரத்துறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனையினால் எவ்வாறான தீர்வுகள் கிடைக்கும், எவ்வாறான அச்சுறுத்தல் ஏற்படும் என்பது தொடர்பில் தெளிவாக கலந்தாலோசிக்க வேண்டும்.

கடந்த காலங்களில், மருந்து தட்டுப்பாடு, மருந்துகளின் தரம், மருத்து உபகரணங்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள், மருந்துகளின் விலை அதிகரிப்பு, சுகாதாரத் துறையின் மனிதவள முகாமைத்துவத்திலுள்ள பிரச்சினைகள் குறித்து பேசியிருந்தோம். ஆகவே, புதிய தீர்வுகளை கொண்டுவர முயற்சிக்கிறார்கள் என்றால் அவை தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கக்கூடியதாகவும் இந்த பிரச்சினைகளை இலக்காகக்கொண்டதுமாகவே அமைய வேண்டும்.

வேறு சில விடயங்களை பிரசித்தப்படுத்தி, தற்போதுள்ள பிரச்சினைகளை மூடிமறைப்ப தற்காக யாராவது முயற்சிப்பார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக, தற்போதுள்ள வைத்திய கட்டளைச் சட்டத்துக்கு பதிலாக புதியவொரு கட்டளைச் சட்டத்தை கொண்டுவருதல் அல்லது தற்போதுள்ள சட்டத்தை திருத்துவது தொடர்பில் பேசப்படுகிறது. அதேபோன்று ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் தொடர்பிலும் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தாதியர்களுக்கான பயற்சி தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் சமூகத்தில் பரந்துபட்ட பிரச்சினைகள் உருவாக வேண்டும். அதனூடாக ஏற்படும் பொது இணக்கப்பாட்டுக்கமையவே திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

முதலில் இந்த சட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலேயே கவனம் செலுத்தவேண்டும். காரணம், வைத்திய கட்டளைச் சட்டம் உள்ளிட்ட எமது சட்ட ஒழுங்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினூடாகவே எமது சுகாதார சேவை சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. எனவே, திருத்தவேண்டிய இடங்களில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கமாட்டோம். ஆனால், அவை பொது இணக்கத்துக்கமையவே முன்வைக்கப்பட வேண்டும்.

மருத்துவச் சபைக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, புதிய மாற்றங்களினால் நடைமுறையில் என்ன தாக்கம் ஏற்படப் போகிறது. எமது சுகாதார சேவையின் ஆரோக்கியத்தை மேலும் வலுப்படுத்தி நாட்டு மக்களுக்கு முழுமையான சேவையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகும்.

ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதற்கு ஆதரவளிப்போம். ஆனால், தற்போதுள்ள பிரச்சினைகளை மூடிமறைப்பதற்காகவோ அல்லது மருந்து மாபியாவை மேலும் அதிகரிப்பதற்காகவோ புதிய சட்டத்திருத்தம் கொண்டுவரப்படுமாக இருந்தால் அதற்கு நாங்கள் எதிர்ப்பை தெரிவிப்போம் என்றார்.

## நீர்க்கட்டணத்தை உயர்த்தி...

ஐக்கிய ஊழியர் சங்க நிதியத்துக்கு ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாட்களில் எரிவாயு விலையும் அதிகரிக்கப்படும் போது மக்கள் ஆதரவற்றுப் போவார்கள். அரசாங்கம் மக்கள் மீது எந்த உணர்வும் இல்லாது செயற்படுகிறது. மக்களின் வாழும் உரிமையும் மீறப்பட்டுள்ளது. இது மக்கள் விரோத மனிதப்படுகொலை அரசாங்கமா என்ற சந்தேகம் எழுகிறது. அதிகரித்துள்ள நீர் கட்டணத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறைக்க வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மிஹிந்தலை விகாரையில் இன்று(நேற்று) மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.

பௌத்த மக்களின் தலைசிறந்த இடமான மிஹிந்தலை புனித ஸ்தலத்துக்கு இழைக்கப்பட்ட அரசாங்கத்தின் இழிவான செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பு பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளித்துள்ள வேளையில், அதியுயர் சட்டத்தையும் மீறி அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்த இழிவான நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய பௌத்த ஆலோசனைக் குழுவும் ஒன்றாக இணைந்து விகாராதிபதியின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த செலவை ஏற்க முடிவு செய்துள்ளோம்.

அரசாங்கத்தின் இந்தச் செயல் தோற்கடிக்கப்பட வேண்டும். இந்த பணத்தை ஜனாதிபதி நிதியத்தில் இருந்தோ அல்லது புத்தசாசன நிதியத்தில் இருந்தோ செலுத்தவேண்டும்.

இந்நாடு மீண்டு வர வேண்டுமானால் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சந்தை சக்திகள் மூலம் உருவாக்கப்படும் மூலதன வளத்தை தடையின்றி, தடையற்ற சந்தை பொருளாதார சக்திகளில் உருவாக்க வேண்டும்.

மனிதாபிமான முதலாளித்துவ கொள்கை அல்லது நடுத்தர பாதை ஊடாக இதற்கு இடமிருக்கிறது.

மனிதாபிமான முதலாளித்துவத்தைப் போலவே, சந்தை சக்திகளுக்கும் மூலதன வளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு வழங்கப்படுவது போலவே இங்கு எழும் முரண்பாடுகளையும் பிளவுகளையும் களைந்து துன்பப்படுபவர்களை வலுப்படுத்த நியாயமான சட்ட கட்டமைப்புக்குள் பணியாற்றக்கூடிய ஊழியர்களின் சேவைப் பாதுகாப்பும் கடின உழைப்புக்கு உரிய ஊதியம் வழங்கப்பட வேண்டும். இதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இந்நாட்டில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை சுதந்திர சந்தை சக்திகளுக்கு மட்டும் வழங்க முடியாது. இந்த நடுத்தர பாதையில் சுதந்திர தனியார் தொழில் முனைவோருக்கு அதிகபட்ச இடமளித்து மூலதன உற்பத்தியை ஏற்படுத்த முடியும்.

அரசாங்கங்களால் தனியாக தொழில் முயற்சியாண்மைகளை செய்ய முடியாது என்பதால், தனியார் நிறுவனத்தை அதற்கு பயன்படுத்தலாம். அவ்வாறு உருவாக்கப்படும் மூலதனம் அனைவருக்கும் சமமாகவும் நியாயமாகவும் பகிரப்படும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே நோக்கம்.

தீவிர சோஷலிசத்தாலோ அல்லது தீவிர கம்யூனிசத்தாலோ ஒரு நாட்டை செழுமைக்கு கொண்டு செல்ல முடியாது. இது ஒரு மாயை. தனியார் தொழில்முனைவு மற்றும் மனிதநேய முதலாளித்துவம் ஒரு நாட்டில் மூலதனத்தை உருவாக்குவதற்கு அவசியம். இந்த வழியில் உற்பத்தி செய்யப்படும் மீலதனத்தை உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் சமமாகப் பங்கிடக்கூடிய மனிதநேய முதலாளித்துவ கட்டமைப்பு மிகவும் வெற்றிகரமானது.

## ரணிலுக்கு வாய்ப்பு...

விட்டு விலகவில்லை. ஆகவே, அங்குள்ளவர்கள் சகலரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலகுவாக வந்துவிட முடியும் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

புறக்கோட்டையில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் செல்லவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை இராஜினாமா செய்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெறவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இன்னும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகவில்லை. ஆகவே, அங்குள்ளவர்கள் சகலரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலகுவாக வந்துவிட முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிதாக அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் என்று கூறி ஆவணங்களில் உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால், நாங்கள் சகலரும் இன்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து எங்களை நீக்கியது தொடர்பான விவகாரம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, வழக்கு விசாரணை நிறைவின்போது நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு செயற்பட்டது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக களமிறங்குவார் என்று நாங்கள் நம்புகிறோம். அவரை ஜனாதிபதியாக்குவதற்கு நாங்கள் ஒத்துழைப்போம். நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்ட தலைவருக்கு இன்னுமொரு வாய்ப்பு வழங்க வேண்டும்.

ஜாதிக லொத்தரැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.08.02
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5194 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 28,036,688.00 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 4 4 0 4 |

| கொவிசெத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3436 |
| சீட்டிழுப்பு திகதி | 2023.08.02 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | Rs. 71,144,589.60 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 02 06 45 79 |
| விசேட எழுத்து | C |
| இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் | 31447 |

| லக்கி 7 | |
|---|---|
| திகதி | 02.08.2023 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0020 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 5 5 5 4 |
| L7 இலக்கம் | 2 7 |
| அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு | ரூ. 10,415,767.44 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 2023/08/02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1224 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 102,916,476.80 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 17 45 60 82 |
| விசேட எழுத்து | T |
| Double Chance இலக்கம் | 25916 |

| ராசி சுப பலன் Handahana | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 503 |
| சீட்டிழுப்பு திகதி | 2023-08-02 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 4,216,209.80 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 10 12 54 |
| விசேட இலக்கினம் | ரிஷபம் |

| Mega Power | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1542 |
| திகதி | 02/08/2023 |
| Double Chance | 47541 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 403,044,080.00 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 08 72 74 79 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |

## பல்கலை பேராசிரியர்கள்...

இதன்போது, அரசாங்கம் தனது வரிக்கொள்கையை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மீண்டும் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க நேரிடும் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இலங்கசிங்க எச்சரிக்கை விடுத்தார்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் நேற்று முன்தினம் (02) கல்வியமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்கள். இந்த சந்திப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் வரிக்கொள்கை மற்றும் பல்கலைக்கழக கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகள் குறித்து இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

இந்த சந்திப்பின் பின்னர் கருத்து தெரிவித்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் கரண ஜயவர்தன,

பல்கலைக்கழகங்களில் மந்தநிலை ஏற்பட்டு வருகிறது. முடிவடைந்த ஆறு மாதங்களில் மாத்திரம் 600 வரையான பேராசிரியர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். ஒருசில கற்கை பீடங்களை முன்னெடுத்துச் செல்வதும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

11 ஆயிரம் வரையில் விரிவுரையாளர்களுக்கான பதவி நிலைகள் இருக்கின்றன. ஆனால், தற்போது 6, 200 இற்கும் குறைவான எண்ணிக்கையிலேயே விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள். அதாவது, 04 ஆயிரத்துக்கு அதிகமான பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

இதுதொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும். வரிக் கொள்கையில் மாற்றத்தை செய்வார்கள் என்று கடந்த ஆறு மாதங்கள் பொறுமையாக காத்திருந்தோம். ஆனால், இதுதொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது போன்று தெரியவில்லை என்று குறிப்பிட்டார்.

அதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இலங்கசிங்க,

எதிர்வரும் செப்டெம்பர் மாதமாகும்போது, முதலாவது வரி மறுசீரமைப்பு முடிவடையவுள்ளது. அதன்போதும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்காவிட்டால் நிச்சயமாக ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல நேரிடும்.

நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பும் கல்வித் துறையும் மிகவும் இக்கட்டான நிலையை சந்தித்துள்ளது. கல்வியை கட்டியெழுப்ப முடியாத நிலைமையையே இந்த அரசாங்கம் உருவாக்கி வருகிறது. பதவிகளுக்கு பொருத்தமில்லாதவர்கள் பேராசிரியர்கள் தொடர்பில் பேசுகிறார்கள். பல்கலைக்கழகத்திலுள்ள கல்வி முறை அல்லது பாடசாலை முறையிலுள்ள கல்வி முறைதொடர்பில் அடிப்படை அறிவு இல்லாதவர்கள் இன்று பல்கலைக்கழக பேராசிரியர்கள் பற்றி பேசுகிறார்கள்.

பேராசிரியரொருவர் மாதமொன்றுக்கு 20 – 24 மணிநேரமே தொழில் புரிவதாகவும் இலட்சம் ரூபா உழைப்பதாகவும் தெரிவித்து மக்களை முட்டாளாக்குகிறார்கள். வெளியிலிருந்து கருத்து தெரிவிப்பதை விடுத்துவிட்டு, பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் பேச்சு நடத்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ போன்றோர் முன்வர வேண்டும்.

பேராசிரியர் என்பவர் 04 மணிநேரம் கடமையாற்றிவிட்டு வீட்டில் உறங்கும் நபரல்ல. அவர்கள் இந்த நாட்டில் அபிவிருத்திக்காகவும் கல்வித் துறைக்காகவும் 24 மணிநேரமும் உழைக்கிறார்கள். நாட்டில் ஒட்டுமொத்த வளங்களும் பல்கலைக்கழகங்களிலேயே உருவாக்கப்படுகின்றன. இருந்தபோதும், இந்த அரசாங்கத்தின் இயலாமை, போலித்தன்மையினால் கல்வித்துறையை இக்கட்டான நிலைமைக்குள்ளாக்கி வருகிறார்கள். பேராசிரியர்கள் என்றால் யார் என்று அறியாதவர்கள் இன்று நாட்டின் கல்வி மறுசீரமைப்ப பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் பாரதூரமான பிரச்சினையாகும்.

விஜயதாச மீண்டும் முதலாம் தரத்திலிருந்து கல்வியை ஆரம்பித்து மீண்டும் பல்கலைக்கழகத்துக்கு நுழைய வேண்டும். அப்போது தான் பேராசிரியர் என்பவர் யார் என்பது புரியும். பொய் கருத்துகளை வெளியிடாமல் விஜயதாச அவரின் கருத்தை வாபஸ்பெற வேண்டும். பேராசிரியர் பற்றி தெரியாதவர்கள் நாட்டின் கல்வி தொடர்பில் பேச தகுதியில்லாதவர்கள்.

அதேபோன்று, விஜயதாச ராஜபக்ஷ அவரின் துறை சார்ந்த விடயங்களில் மாத்திரம் கவனத்தில் கொள்ள வேண்டும். எங்களின் பிரச்சினைகளை கல்வியமைச்சருடனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடி தீர்வை பெற்றுக்கொள்கிறோம். அதற்கு அப்பால் தேவையில்லாத விடயங்களில் சகலரும் தலையிடக் கூடாது என்றார்.

# இக்கட்டான சூழ்நிலையில் ஒத்துழைப்பு வழங்குங்கள்

## இலங்கைப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் கோரிக்கை

இலங்கை தற்போது எதிர்நோக்கிவரும் பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பங்களிக்குமாறு இலங்கைப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், நியூசிலாந்தில் வசிக்கும் இலங்கை சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நியூசிலாந்துக்கு ஆய்வுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கைப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், நியூசிலாந்தில் வசிக்கும் இலங்கை சமூகத்தினரை அண்மையில் (28) சந்தித்தபோதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தது.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய இலங்கைப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிடுகையில், தாய்நாடு தற்போது எதிர்நோக்கி வரும் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபட ஆதரவு வழங்க வேண்டும். தமது ஒன்றியம் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் உறுப்பினர்கள் அனைவரும் பொதுவான இலக்குகளுக்காக ஒன்றுபட்டு நிற்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், நியூசிலாந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த வனுஷி வோல்டர்ஸ் கலந்து கொண்டதுடன், இந்தப் பயணத்துக்கு நியூசிலாந்தை தெரிவு செய்தமை குறித்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். நியூசிலாந்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு சாதகமான கட்டமைப்புகள் மற்றும் அதற்கான



இடங்களை கொண்டதாக பாராளுமன்ற முறைமை இருப்பதாலும் அந்த நாட்டில் பெண்களின் அரசியல் செயற்பாடுகளை நன்கு புரிந்துகொள்வதன் மூலமும் இலங்கையின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதிலுள்ள நல்ல நடைமுறைகளைப் பின்பற்ற முடியும் என்று வோல்டர்ஸ் தெரிவித்தார்.

ஒன்றியத்தின் உறுப்பினர்களான சீதா அரம்பேபொல, ரோஹிணிகுமாரி விஜேரத்ன, சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி, கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, சட்டத்தரணி தலதா அதுகோரல, கோகிலா குணவர்தன, முதிதா பிரிசாந்தி, ராஜிகா விக்கிரமசிங்க, மஞ்சுலா திசாநாயக்க, கலாநிதி ஹரினி அமரசூரிய, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) இந்திரா திசாநாயக்க, பாராளுமன்ற ஊடக முகாமையாளர் நிம்மி ஹாத்தியல்தெனிய உள்ளிட்டோர் இதன்போது கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் இந்த ஆய்வுப் பயணம் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின்(USAID) முழுமையான அனுசரணையில் தேசிய ஜனநாயக நிறுவனத்தினால் (NDI) ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிர்மாணத்துறைக்கு புத்துயிர் அளித்தல் தொடர்பில் அரசு விசேட கவனம்

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



இலங்கையின் நிர்மாணத்துறைக்கு புத்துயிர் அளித்து தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

"நிர்மாணக் கைத்தொழில் புத்துயிர் பெறுவதற்கான செயற்குழு" நேற்று (02) ஜனாதிபதி செயலகத்தில் கூடியபோதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நிர்மாணத்துறையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நிர்மாணத்துறையினருக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய மூன்று மாத நிலுவைத்தொகையை இம்மாதத்துக்குள் வழங்கக் கூடியதாக இருக்கும் என குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இங்கு மேலும் உரையாற்றிய சாகல ரத்நாயக்க, வெளிநாட்டு உதவியின் கீழ் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டு, கடந்தகால பொருளாதார நெருக்கடியினால் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீள ஆரம்பிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் விருப்பமாகும்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் வெற்றியுடன், இந்த நடவடிக்கைகளை துரிதமாகச் செயல்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்படி, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு திணைக்கள அதிகாரிகளுக்கு சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்தார்.

# அஜித் ரோஹண தாக்கல் செய்த மனு செப்டெம்பரில் விசாரணை

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நியாயமான காரணமின்றி தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்துச் செய்ய உத்தரவிடக்கோரி இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை (03) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த நிலையில் மற்றுமொரு வழக்கு விசாரணை இடம்பெற்றதால் இந்த மனு மீதான பரிசீலனை ஒத்திவைக்கப்படுவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.நகரில் கட்டணமானி பொருத்தாத முச்சக்கரவண்டிகளை அகற்றும் பொலிஸார்



யாழ். நகர்ப் பகுதி முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் இருந்து கட்டணமானி பொருத்தாத முச்சக்கர வண்டிகளை அகற்றும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போக்கு வரத்துப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

யாழ். நகர் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் பொலிஸார் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.யாழ். மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் முச்சக்கரவண்டிகளுக்கு கட்டணமானி பொருத் தாமையினால் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்கள் அதிக ளவில் வசூலிக்கப்படுவ தாக பல்வேறு முறைப் பாடுகள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாத முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் கடந்த இரண்டு மாத காலத்துக்கு முன்னரே அறிவித்து, இரண்டு மாதகால அவகாசம் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகள் திருட்டு; ஒருவர் கைது



வட்டுக்கோட்டை பகுதியிலிருந்து நேற்று (03) மாடுகளை திருடிச்சென்ற ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனமொன்றில் மாடுகளை கடத்திச் செல்வதாக, மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் நவாலி மயானத்துக்கு அருகில் வைத்து யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒருவரை கைது செய்ததுடன் மாடுகளையும் கைப்பற்றினர்.

பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





**சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னை நாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த கொடியேற்ற நிகழ்வு நேற்று (03) காலை 10மணிக்கு நடைபெற்றது. ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் தலைமையில் விசேட பூஜையும் அபிஷேகமும் இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.**

**படங்கள்: உடப்பு நிருபர்**


# பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 ஆகஸ்ட் மாதம் 24 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்


# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

மேஷம்: கடந்த நாட்களில் உங்கள் கைநழுவிப் போனவை மீண்டும் கிடைக்கும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள்.

ரிஷபம்: புகழ், கீர்த்தி, செல்வாக்கு உயரும். செய் தொழிலில் திட்டமிட்ட இலாபங்களை அடைவீர்கள்.

மிதுனம்: தடைப்பட்டிருந்த உங்கள் வெளிநாட்டுப் பயணம் சிறப்பாக அமையும். பூர்வீக சொத்துகளால் சங்கடங்கள் தோன்றும்.

கடகம்: கடுமையான அலைச்சலுடன் காரியக்கேடும் ஏற்படும். கோபத்தைக் குறைத்துக்கொள் ளுங்கள்.

சிம்மம்: நீண்ட நாள் காதலியை சந்திப் பீர்கள். பங்கு வியாபாரத்தில் எண்ணிய இலாபத்தை அடை வீர்கள்.

கன்னி: நோயிலிருந்து விடுதலை. நீண்ட நாள் சத்துருக்கள் உங்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள்.

துலாம்: புத்திரர்களால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம். தேவையற்ற செலவுகள் மன நிம்மதியைக் கெடுக்கும்.

விருச்சிகம்: வீடு வாகனங்களால் வீண் செலவினங்கள். தொல்லைகள் ஏற்படலாம். தாய்க்கு பீடை.

தனுசு: மனத்துணிவுடன் எதையும் சாதிப்பீர்கள். நண்பரிடமிருந்து உங்களுக்கு உதவிகள் கிடைக்கும்.

மகரம்: வீண் பேச்சை தவிர்த்துக் கொள்ளுங்கள். கட்டாயச் செல வினங்களால் தொல்லைகள் உண்டு.

கும்பம்: உடல் நோய்கள் குணமடையும் நாள். எந்தச் சவால்களையும் முறியடிப்பீர்கள்.

மீனம்: வெளியிடத்தில் அல்லது குடும்பத்தில் அவமானம் ஏற்படும். வீண் அலைச்சல்களால் உடல் அசதி.

**திதி** : திருதியை பி.ப.12.45 வரை பின் சதுர்த்தி (தேய்)
**நட்சத்திரம்** :சதயம் மு.ப.7.08 வரை பின் பூரட்டாதி
**யோகம்:** சித்த யோகம் மு.ப.7.08 வரை பின் மரணயோகம்
**வார சூலை:**மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:**மு.ப. 6.04 – 7.04 மணிவரை
**ராகுகாலம்:**10.34 – 12.04 மணிவரை
**எமகண்டம்** :3.04 - 4.34 மணிவரை
**குளிகை:**7.34 – 9.04 மணிவரை
**சந்திராஷ்டமம்** :கடகராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், திருவாதிரை, சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்** :சங்கடஹர சதுர்த்தி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பின்னவல பிரதேசம் கலாசார மையமாக பிரகடனம்

■ இரத்தினபுரி நிருபர்

சப்ரகமுவ மாகாண சபையினால் ரம்புக்கன, பின்னவல பிரதேசம் கலாசார மையமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சுற்றுலாத் தலத்தை உருவாக்கி கொடுப்பதற்காக சப்ரகமுவ மாகாண சபையினால் ரம்புக்கன, பின்னவல பிரதேசம் கலாசார மையமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ரம்புக்கன, பின்னவல பிரதேசத்தில் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கென ரம்புக்கன பின்னவல சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் இயங்கும் இப்ரெனிகம முன்மாதிரி கிராமத்தினால் ஒவ்வொரு மாதமும் இறுதி வாரத்தில் இரண்டு நாட்கள் முழுதும் பல்வேறு கலாசார நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் கடந்த மாத இறுதியில்(29) ரம்புக்கன,பின்னவல இப்ரெனிகம முன்மாதிரி கிராமத்தில் பல்வேறு கலாசார நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள் என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் முன்னாள்



அமைச்சர் சம்பிகா பிரேமதாச, சப்ரகமுவ மாகாண பதில் பிரதான செயலாளர் பிரபாத் உதாகர, சப்ரகமுவ மாகாண சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி, மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சஞ்ஜீவ கொடல்லவத்த, உதவி செயலாளர் சமேதானி மாதரஹேவகே உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தொலைபேசிகளை திருடிய மூவருக்கு விளக்கமறியல்!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல தொலைபேசிகளை திருடிய குற்றச்சாட்டின் கீழ் மூவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் பல்லசுட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது. இந்நிலையில், விசாரணையின்போது அவர்கள் தொலைபேசிகளை திருடியதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டவேளை, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.



**களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் சம்மேளனக் கூட்டம் பேருவளை மருதானை மர்ஹூம் அப்துல் ஹமீத் ஹாஜியாரின் இல்லத்தில் மாவட்டத் தலைவர் எம்.எம்.ஜவ்பர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் நாட்டின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைவரம் தொடர்பில் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றினார்.**

**படம்: பேருவளை நிருபர்**

# அனுமதிப்பத்திரமின்றி எடுத்துச்சென்ற இரண்டாயிரம் கடலட்டைகள் மீட்பு



■ மன்னார் நகர் நிருபர்

மன்னாரில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி கடலட்டைகளை கொண்டுசென்ற இருவர் நேற்று வியாழக்கிழமை (03) காலை மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கடலட்டைகள் உயிருடன் மீட்கப் பட்டன.இராணுவத்தினரால் குறித்த வாகனம் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது குறித்த கடலட்டைகள் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பல்லவராயன்கட்டு பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட கடலட்டைகளுடன் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


தற்போது விற்பனையில்!

ஜீனியர் தமிழன் வழங்கும்

2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஓகஸ்ட் 04ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# நைஜர் ஆட்சிக்கவிழ்ப்பில் இலங்கைக்குள்ள பாடம்

ஜூலை 26ஆம் திகதியன்று ஜனாதிபதி மொஹமட் பாசும் பதவிநீக்கம் செய்யப்பட்டமை , புதிய ஜனநாயக நாடான நைஜரில் அரசியல் நிலைத்தன்மைக்கும் சாஹேல் பிராந்தியத்தில் வேகமாக பரவிவரும் இஸ்லாமிய கிளர்ச்சியை எதிர்கொள்வதற்கான முயற்சிகளுக்கும் எதிரான ஒரு பெரிய பின்னடைவு என்று சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

1960ல் பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இந்த மேற்கு ஆபிரிக்க நாட்டின் முதல் அமைதியான ஜனநாயக மாற்றத்தில் 2021ல் ஜனாதிபதியானார் பாசும் . பொதுவாக கொந்தளிப்பான ஆட்சிக் கவிழ்ப்பு நிறைந்த பிராந்தியத்தில் ஜனநாயக ஒழுங்கின் அடையாளமாக அவர் திகழ்ந்தார் என்று கூறினாலும் மிகையில்லை. நைஜரில் படைகளை நிறுத்தியிருந்த அமெரிக்கா மற்றும் பிரான்ஸுடன் அவர் வலுவான பாதுகாப்பு கூட்டாண்மைகளைக் கட்டியெழுப்பியிருந்தார். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாமல் அவரது ஆட்சி திணறிய நிலையில் பாசும் மீதான அழுத்தமும் அதிகரித்து வந்தது.

தெற்கில் கிளர்ச்சி பரவியதால் இராணுவத்தின் ஒரு பகுதியினர் விரக்தியடைந்ததோடு அவர் பிரான்ஸை அதிகமாக நம்பியிருந்ததில் அவர் மீது அதிருப்தியும் இருந்தது. அதோடு இராணுவத்தின் செல்வாக்கை குறைப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருந்தார்.

சில தளபதிகளை ஓய்வுபெறச் செய்ததோடு, வேறு சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்பினார். தவிர, பாதுகாப்புப் படைக்கு வழங்கப்பட்ட சலுகைகளையும் ஜனாதிபதி குறைத்தார். ஆனால் அதிகரித்து வரும் ஜிகாதி தாக்குதல்கள் மற்றும் வாழ்க்கை செலவு நெருக்கடிகளுக்கு இடையில் பொதுமக்களுக்கும் அரச நிர்வாகத்தின் மீது சோர்வு ஏற்பட்டது. “மோசமடைந்து வரும் பாதுகாப்பு நிலைமை மற்றும் மோசமான சமூக மற்றும் பொருளாதார நிர்வாகம்” ஆகியவற்றைக் காரணம் காட்டி ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய முற்பட்டபோது, ஜனாதிபதியின் கீழ் இருந்த பாதுகாப்புப் படை பொதுமக்களின் இந்த எதிர்ப்பு மனநிலையை நன்றாக பயன்படுத்திக் கொண்டது.

அமெரிக்காவும் பிரான்ஸும் மேற்கு ஆபிரிக்காவின் மிகப் பெரிய நாடான நைஜரை அந்தப் பிராந்தியத்தில் இஸ்லாமிய கிளர்ச்சிக்கு எதிரான அரணாக பார்க்கின்றன. நைஜர், புர்கினா பாசோ, மாலி ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டுள்ள சஹேல் பிராந்தியத்தில், அல் கொய்தா, இஸ்லாமிய அரசு மற்றும் பல ஜிகாதி குழுக்கள் செயல்படுகின்றன. 2021 மற்றும் 2022இல் ஆட்சிக் கவிழ்ப்புகளைக் கண்ட மாலி மற்றும் புர்கினா பாசோவில் ஆட்சிக்கவிழ்ப்பு செய்தவர்கள் ஐ.நா.அமைதிப்படையினரையும் பிரெஞ்சுத் துருப்புக்களையும் வெளியேற்றி, கெட்ட பெயருக்கு ஆளாகியிருக்கும் ரஷ்யாவின் இராணுவ நிறுவனமான வாக்னருடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை கட்டியெழுப்ப முனைந்தார்கள்.

நைஜரிலும் ஆட்சிக்கவிழ்ப்பின் ஆதரவாளர்கள் தலைநகர் நியாமியில் ரஷ்ய கொடிகளை ஏந்தியும் பிரெஞ்சு துருப்புக்களை வெளியேற்றக் கோரியும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். நீண்டகாலமாக பிரான்ஸ் இராணுவம் அங்கே இருப்பதும் பயங்கரவாதத்துக்கு எதிரான மேற்குலகின் போராட்டத்தில் பெரியபலன் இல்லாததும் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள இராணுவத்தினரிடமும் மக்களிடமும் அதிருப்தியை அதிகரிக்க பங்களித்திருக்கின்றன.

ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பு எதுவும் தராத பதவி வெறி பிடித்த தளபதிகள் இதை பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றனர். பிரான்ஸும் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் என்கிற பிராந்தியக் குழுவும் பசுமை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும் என ஆட்சியைக் கவிழ்த்தவர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. ஆனால் இராணுவம் தலையிட்டால், அது நாட்டை மேலும் நிலைத் தன்மையற்றதாக்கி, அதில் ஏற்படும் குழப்பத்தை கிளர்ச்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வழிவகுக்கும் நிலைமையே இருக்கிறது.

அதற்குப் பதிலாக, நைஜரில் இன்னும் செல்வாக்கைக் கொண்டிருக்கும் அமெரிக்காவும் பிரான்ஸும் தளபதிகளுக்கும் ஜனாதிபதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்து, சர்ச்சைகளுக்கு சுமூகத் தீர்வு காணவும் ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும் முயற்சிக்க வேண்டும்.

இலங்கையிலும் கிளர்ச்சி , இராணுவ ஆட்சிக்கான முயற்சிகள் கடந்த வருடம் நடந்ததாக செய்திகளில் அடிக்கடி தகவல்கள் வெளிவருகின்றன.


ஆட்சியாளர்கள் தொடர்பான மக்களின் அதிருப்தியை நாட்டின் இராணுவம் சரியாக கவனிக்கும்போதே அங்கு ஆட்சிக்கவிழ்ப்பு சதிகளும் தலைவர்மாரை பதவிகளில் இருந்து விரட்டும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நைஜர் நாட்டு அரசியல்வாதிகளின் அரசியல் மோசடிகள், அந்நாட்டில் பயங்கரவாத மோதல்கள் அதிகரிப்புக்கு காரணமாகவுள்ளன என அந்நாட்டு ஆயர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்ததை இங்கு குறிப்பிடவேண்டும்.

அரசியல் பதவியிலிருப்போர் தங்கள் அதிகாரத்தை சுய இலாபங்களுக்காகப் பயன்படுத்துவதுடன், சட்டங்களையும் தங்களுக்கு இயைந்தாற்போல் வளைப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்த நைஜர் ஆயர்கள், அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் மோசடிகளை கைவிடும்போதே பயங்கரவாத மோதல்கள் முடிவுக்குவரும் எனவும் தெரிவித்திருந்தனர்.

நைஜரில் இப்போது ஏற்பட்டுள்ள ஆட்சிக்கவிழ்ப்பு இலங்கைக்கும் மறைமுகமாக செய்தியொன்றை கூறியிருக்கிறது. மக்கள் கிளர்ந்தால் எப்போதும் எதுவும் நடக்கலாம் என்ற கனதியான செய்தியே அது.

# மக்களாட்சி யாருக்கானது?




**க. பழனித்துரை**

ஜோசுவா குர்லாண்ட்சிக் எழுதிய “பின்வாங்கும் மக்களாட்சி” என்ற நூலை வாசிக்கும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. இந்த நூல் இன்றைய உலக மக்களாட்சி சூழலைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள உதவும் வகையில் ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது. உலக அளவில் மக்களாட்சி எப்படி சிதைவுறுகிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டும் நூல்தான் இது.

இன்று உலகம் முழுவதும் ஒரு கூக்குரல் கேட்கிறது. மக்களாட்சிக்கு ஆபத்து, மக்களாட்சி சிதிலமடைகிறது என்று அரசியல் கட்சிகள் விவாதிக்கின்றன. உலகளாவிய நிலையில் “பின்வாங்கும் மக்களாட்சி” என்ற நூலில் இவை விவாதிக்கப்பட்டுள்ளன. அடிப்படையில் மக்களாட்சி குறித்து ஆய்வு செய்பவர்கள் இன்றைய பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது வலுவிழந்து, தாழ்வு நிலை நோக்கி நகர்ந்து வருவதைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். பெரும்பாலான அரசியல் கட்சிகள் இதை மறுக்கவில்லை. இந்தியாவில் மிகப் பெரும் பொதுக் கருத்தாளர்கள் இந்தக் கருத்தை 30 ஆண்டுகளுக்கு முன்பே தெரிவிக்க ஆரம்பித்து விட்டனர்.

இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதிநிதிகளைக் கொண்டு நடத்தப்படும் அரசாங்கம், தன் ஆளுகையை வலுவாக கட்டமைத்து ஆளுகைக்கு வலுச் சேர்த்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை கூட்டுவதில் கவனம் செலுத்துவதற்குப் பதில், தேர்தலை நோக்கிய ஓர் அரசியலை கட்டமைத்து, அந்தத் தேர்தலுக்கு நிதி என்ற பெயரில் பெரும் ஊழலில் ஈடுபட்டு அதன் விளைவாக ஆட்சியும் நிர்வாகமும் சிதைவுறும் நிலைக்கு வந்துவிட்டது என்பது விவாதப் பொருளாக்கியுள்ளது.

இந்த ஊழல் என்பது ஒரு நிலை வரை கட்சியை பலப்படுத்துவதற்காகவே நடந்தது. அடுத்த நிலையில் ஊழலில் பெரும்பணம் வர ஆரம்பித்தவுடன் அந்த ஊழல் பணம் குடும்ப வளர்ச்சிக்கும் செல்ல ஆரம்பித்துவிட்டது. இந்த நிலைதான் ஒட்டுமொத்த மக்களாட்சியின் சிதைவுக்குக் காரணமாகிறது. புதிதாக மக்களாட்சிக்குள் வந்த நாடுகள் தேர்தலை முன்னிலைப்படுத்தித்தான் மக்களாட்சிக்கு வருகிறோம் என்று பிரகடனப்படுத்தி வந்தன.

ஆனால், மக்களாட்சிக்குள் வந்து மக்களாட்சியில் ஒவ்வொரு நிலையாக உயர்வதற்குப் பதில், 50 அல்லது 60 ஆண்டுகளைக் கடந்து, தேர்தலைத் தாண்டி மக்களாட்சியின் அடிப்படை விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் சமூகத்தைக் கொண்டு செல்ல முடியவில்லை. இந்தச் சூழல்தான் அரசியல் கட்சிகளின் கருத்து வறட்சியை எடுத்துக்காட்டுகிறது. மக்களாட்சி அரசியலில் எந்தப் புதுமையையும் காண முடியவில்லை.

அடுத்து தேர்தலையே மையப்படுத்திய காரணத்தால், அதற்காகவே நிதி திரட்டும் அரசியல் செயல்பாட்டால் அரசியலில் மையப்படுத்தப்பட வேண்டிய கருத்தாக்கங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் புறந்தள்ளப்பட்டு, நிதி உருவாக்கம் ஆக்கிரமித்துக் கொண்டது. நிதி உருவாக்கம் அரசியல்வாதிகளின் சிந்தனையை ஆட்கொண்ட காரணத்தால் அரசியல் மக்களுக்கானது, மக்கள்தான் முதன்மையானவர்கள், மக்களாட்சியில் மக்களை அணுகுவதைத் தவிர மாற்றுவழி இல்லை என்ற நிலை மாறி, மக்களை நிதிக்கு வாங்கிக் கொள்ளலாம், நிதிதான் பிரதானம் என நம்பும் சிந்தனைப் போக்கு மேலோங்கிவிட்டது.

அந்த சிந்தனைப்போக்கு சந்தை அரசியல்வாதிகளிடம் விதைத்துவிட்டது. அது மட்டுமல்ல நிதி திரட்டி வாக்காளர்களின் வாக்குகளை விலைக்கு வாங்கி அதிகாரத்தைப் பெற்றுவிட்டால், நாம் பலம் பொருந்தியவர்களாகச் செயல்படலாம் என்ற அடுத்த சிந்தனைப் போக்கும் மக்களாட்சிக்கு எதிரான சூழலை உருவாக்கிவிட்டது.

அதிகாரத்துக்கு தேர்தல் மூலம் வந்தவர்கள், தான் எதை வேண்டுமானாலும் செய்துவிடலாம் என்ற சிந்தனையில் செயல்பட ஆரம்பித்துவிட்டனர். சட்டத்தின்படி ஆட்சி என்ற நிலை போய் ஆளுங்கட்சி சொல்வதுதான், செய்வதுதான் ஆளுகை மற்றும் நிர்வாகம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுவந்ததன் விளைவு, சட்டத்தை மீறும் ஒரு கலாசாரம் உருவாகி, எல்லையற்ற ஊழலில் ஆட்சியாளர்கள் சிக்கிக் கொண்டனர். இதை பலர் தெரிந்தே செய்தனர். சிலர் அறியாது செய்தனர்.

மக்களாட்சி அனைவருக்குமானது. ஆனால், இன்று நிதி உள்ளவர்களுக்குத்தான் வாய்ப்பு என்ற நிலை வந்ததால் ஏழை மக்களால் தேர்தலுக்குள் நுழைய இயலவில்லை. விளைவு, நாம் யாருக்கான மக்களாட்சியை விவாதிக்கிறோம் என்று மக்களாட்சிக் கோட்பாட்டாளர்கள் கேட்கின்றனர். ஏழை மக்களால் பங்குபெற முடியாத ஒரு மக்களாட்சி மங்குமே தவிர பொங்காது.

இன்றைய மக்களாட்சிச் சூழலில் அதாவது, அரசியலிலிருந்து நல்லவர்கள், திறன் உள்ளவர்கள், ஏழைகள் அந்நியப்பட ஆரம்பித்தபோது அங்கு வந்து சேர்பவர்கள் பெரும் குற்றப் பின்னணி கொண்டவர்கள். பாராளுமன்றத்துக்குள்ளும் மக்களாட்சியில் இரண்டு விதமான அரசியல் செயல்படுகிறது. ஒன்று, மக்கள் அரசியல். இரண்டாவது, அதிகார அரசியல். மக்கள் அரசியல் என்பது மக்களின் ஆதரவை நம்பிச் செயல்படுவது. மக்களைத் தயார்படுத்தி, மக்களின் பங்கேற்போடு நடத்தப்படும் ஓர் அரசியல். எதையும் மக்களை முன்னிறுத்திச் செயல்படுவது. அதிகார அரசியல் என்பது அதிகாரத்தை மையப்படுத்தி எந்த வழியிலாவது அதிகார மையங்களுக்குள் நுழைந்து, அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயல்படுவது. இதைத்தான் 50 ஆண்டுகால அரசியலில் நாம் பார்த்து வருகிறோம்.

ஆட்சியில் இருந்த கட்சிகள் நிர்வாகத்தில் தவறுகள் செய்யாமல் இருக்க முடியாது. இதை பொது நிர்வாகத்தின் தந்தை என போற்றப்பட்ட உட்ரோ வில்சன் கூறுகிறார். முறையாக தணிக்கைகள் நடைபெறும்போது நிர்வாகத்தில் தவறுகள் நடப்பது சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றன.

ஒரு காலம்வரை அந்தத் தவறுகளைப் பெரிதாக்கி அரசியல் கட்சிகள் அரசியல் செய்யவில்லை. காரணம், அந்தத் தவறுகளால் பெரும் பணம் கட்சிக்கும் அமைச்சர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் செல்லவில்லை. என்று பெரும் பணம் கட்சிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் பெருமளவில் செல்ல ஆரம்பித்ததோ அப்போதுமுதல் அரசியல் கட்சிகள் அவற்றின் இயல்புத் தன்மையை இழந்து, வணிகம் செய்யும் நிறுவனங்கள்போல் ஊடகங்களைத் தங்களுக்காக உருவாக்கி, அந்த ஊடகங்கள் மூலம் தன் கட்சிக்கும் தலைவர்களுக்கும் பிம்பங்களைக் கட்டி ஒரு வணிக சாம்ராஜ்யத்தை கட்சிச் செயற்பாடுகளுக்குள் கொண்டுவந்து விட்டன. அரசியல் கட்சிகள் தங்களின் விளம்பரங்களைச் செய்ய விளம்பர நிறுவனங்களை நாடின.

இவை அனைத்தும் ஒரு முப்பது ஆண்டுகால உருவாக்கங்கள். இதன் பின்புலம் என்பது சந்தை யுகம் என்பதை பலர் முறையாகப் புரிந்துகொண்டு செயல்படுவதில்லை. இந்தப் புதிய சூழல்தான் பொதுமக்களுக்கும் கட்சிகளுக்கும் உள்ள உறவை போலியாக்கி விட்டது. அத்துடன் இது நிற்கவில்லை. கட்சிக்கும் கட்சிக்காரர்களுக்கும் உள்ள உறவையும் போலியாக்கி விட்டது.

கொள்கைகள், சித்தாந்தங்கள் குறித்த விவாதங்களை அரசியல் கட்சிகள் முன்னெடுப்பதற்குப் பதிலாக தேர்தலில் வெற்றி பெற நுணுக்கங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. அரசியல் கட்சிகள் மக்கள் சேவையில் இணைந்திடுவதற்குப் பதிலாக, போரிடும் இரண்டு நாடுகள்போல் ஒருவரையொருவர் தரம் தாழ்த்தி விமர்சனம் செய்து, நீதிமன்றங்களுக்குச் சென்று நீதிமன்றத்தின் மூலம் ஒருவரையொருவர் பழிவாங்கும் வகையில் செயல்படுகின்றன. இந்தப் போரில் நீதிமன்றத்தையும் தங்கள் தரம் தாழ்ந்த அரசியலில் உள்வாங்கிக் கொண்டுள்ளன அரசியல் கட்சிகள்.

**ஆட்சியைப் பிடிக்கும் கட்சிகள்**

அரசின் நிர்வாகத்தில் சட்டப்படி ஆட்சி என்பதைத் தவிர்த்து, ஆளும் கட்சி தரும் வாய்மொழி உத்தரவை அமுல்படுத்தும் ஏவலராக மாறிவிட்டது என்பதுதான் நாம் பார்க்கும் அரசியல் யதார்த்தம்.

இந்த சிதைவுற்ற மக்களாட்சியைச் சீரமைப்பது எப்படி என்பதுதான் இன்று அனைவர் முன் எழும் கேள்வி. பலர் தேர்தல் சீர்திருத்தத்தைச் செய்யுங்கள். தேர்தல் அரசியலில் பெருமளவு மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்கின்றனர். ஆளுகையிலும் நிர்வாகத்திலும் சீர்திருத்தம் செய்யுங்கள். பெருமளவு ஊழலையும் நிர்வாகச் சீர்கேட்டையும் தடுக்கலாம் என்று பலர் ஆலோசனை வழங்குகின்றனர்.

ஊழலுக்கான நீதி விசாரணையை விரைவு நீதிமன்றத்தின் மூலம் நடத்தி குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதும் குற்றப் பின்னணி உள்ளவர்களைத் தண்டிப்பதன் மூலம் அரசியலிலிருந்து அப்புறப்படுத்தி விடலாம் என ஆலோசனை வழங்குகின்றனர். இன்றைய அரசியல் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை மூலம் தீர்வுகாண பலர் முயலுகின்றனர். ஆனால், எதுவும் நடைபெறவில்லை.

குற்றப் பின்னணி கொண்டோர் ஏன் அரசியலுக்குள் செல்கிறார்கள் என்றால், அங்கு அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கிடைக்கிறது என்பதால்தான், அரசியல் நடத்த குற்றப் பின்னணி கொண்டவர்கள் இன்று தேவைப்படுகிறார்கள். அந்த அளவுக்கு வன்முறை நிறைந்ததாக அரசியல் மாறிவிட்டது. மேலே குறிப்பிட்ட அனைத்துத் தீர்வுகளும் பாராளுமன்றத்தின் புதிய சட்டங்கள் மூலமாக வரவேண்டும்.

அனைவரும் மக்களாட்சியைக் காப்பாற்றுவதாகப் பேசுகிறார்கள். எந்த மக்களாட்சியைப் பேசுகிறார்கள்? சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளைக் கடந்து மக்களாட்சி நடைபெறும் நாட்டில் சமத்துவமின்றி, மரியாதையின்றி, அரசு தரும் பயன்களுக்காக கையேந்தி நிற்கிறார்களே- அவர்களின் மக்களாட்சி பற்றி ஏன் பேசுவதில்லை?

சட்டத்தின் முன் அனைவரும் சமம். அப்படியொரு சூழல் இன்று இருக்கிறதா? எல்லையற்ற ஏற்றத்தாழ்வுகள் சமூகத்தை கவ்வியுள்ளன. சமூக ஏற்றத் தாழ்வுகளுடன் இருந்த ஒரு நாடு, இன்று பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு உட்பட்டு சமத்துவத்தை இழந்து தவிக்கும் சமூகங்கள் நிறைந்த நாடாக உள்ளது. எங்கே, எப்படி இந்த சமத்துவத்தை கொண்டுவருவார்கள் நம் ஆட்சியாளர்கள்?

உரிமைகளோ சமத்துவமோ சகோதரத்துவமோ நீதியோ நேர்மையோ மையப் பொருளாகக் கொண்ட ஒரு மக்களாட்சியைப் பேச இயலவில்லை. பேசுபொருளாக இன்று இருப்பது தேர்தல் ஜனநாயகம்.இந்த ஜனநாயகத்தில் ஆட்சிகள் மாறலாம், அடிப்படை மாறாது. எனவே, புதிய ஜனநாயகம் நோக்கி சமூகத்தை நகர்த்த நாம் செய்ய வேண்டியது, எது புதிய ஜனநாயகம் என்பதற்கான விவாதத்துக்குள் பயணிக்க வேண்டும்.

நன்றி - தினமணி

## நக்கல் நமசிவாயம்

ஹரீனையும் மனுஷவையும் யூ.என்.பி. செயற்குழுவில திரும்பவும் சேர்த்திட்டாங்களாம்.. இனியென்ன சஜித்,ஹர்ஷ ,கிரியெல்லவுக்கும் அழைப்பு அனுப்புவாராக்கும் ரணில்... எல்லாம் ஒரு வீட்டு பிள்ளையள் தானே...



## இன்றைய நாளில்...

- 1948 – இலங்கையில் மலையகத் தமிழரை நாடற்றவர்களாக்கும் குடியுரிமைச் சட்டத்தை பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்.
- 1972 – சிம்லா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.
- 1977 – அ. அமிர்தலிங்கம் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1987 – விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன் முதலில் மக்கள் முன் தோன்றி உரையாற்றினார்.
- 1998 – இலங்கை முழுவதும் அவசரகாலச் சட்டத்தை அரசுத்தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்தார்.
- 2006 – திருகோணமலை நிவாரணப் பணியாளர்கள் படுகொலை: வறுமைக்கு எதிரான அமைப்பு என்ற பிரெஞ்சு அரச சார்பற்ற அமைப்பின் 17 தமிழ்ப் பணியாளர்கள் மூதூரில் இலங்கை இராணுவத்தினரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.
- 2006 – ஈழத்துக் கலைஞர் பொன். கணேசமூர்த்தி யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2007 – நாசாவின் பீனிக்ஸ் விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.

# கையில் சூட்டுக்காயத்துடன் இளைஞன் வைத்தியசாலையில்: கடற்படை துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதாக சந்தேகம்!

*சாவகச்சேரி நிருபர்*

கையில் சூட்டுக் காயத்துடன் இளைஞன் ஒருவர் 02/08 புதன்கிழமை இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்..

கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் மேற்படி சூட்டுக் காயம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பளைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாலிப் பகுதியில் உள்ள காணியில் புதன்கிழமை பிற்பகல் ஜே.சி.பி. இயந்திரம் ஒன்று புதையுண்ட நிலையில் மேற்படி இளைஞனும், மேலும் சிலரும் ஜே.சி.பி. வாகனத்தை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்துள்ளனர்.



இதன்போது திடீரென துப்பாக்கிப் பிரயோகச் சத்தம் கேட்டதாகவும்-சம நேரத்தில் இளைஞனின் கையில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும்-சில மீற்றர் தொலைவில் கடற்படை நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே சூட்டுக்காயம் கடற்படையின் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இதில் கிளாலி, எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த 26வயதான கஜேந்திரன் பிரணவா என்ற இளைஞனே கையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் புதன் ஒன்றுகூடல்





*யாழ். நிருபர்*

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றுவரும் நூற்றாண்டு கால புதன் ஒன்றுகூடலில் நேற்று முன்தினம் (02) புதன்கிழமை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

'உள்ளத்தனையது உயர்வு' என்ற பொருளில் உரையாற்றிய அவர், மாணவர்களது நிலையை ஆசிரியர்கள் அறிந்து செயற்பட வேண்டும் என்றும் நேர்முகமாக சிந்திக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வை கலாசாலையின் உடற்கல்வி பாடநெறி ஆசிரிய மாணவி எலிசபெத் கொட்பரினா ஹென்றி முன்னிலைப் படுத்தினார்.

அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் அனந்தசயனனும் போதைப்பொருள் பாவனையை தடுப்பதில் ஆசிரியர்களின் பங்கு என்னும் தலைப்பிலான உரையை உடற்கல்விநெறி ஆசிரிய மாணவன் இ.இராஜகோகுலனும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் அதிதிபேச்சாளர் நாகேந்திரராஜா கலாசாலை அதிபரால் கௌரவிக்கப்பட்டார்.

# மலையக எழுச்சிப் பயணத்திற்கு ஆதரவாக யாழில் பேரணி







*யாழ். நிருபர்*

மலையக எழுச்சிப் பயணத்துக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நேற்று (03) வியாழக்கிழமை பேரணி இடம்பெற்றது.

யாழ்ப்பாண மத்திய பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு பேரணி இடம்பெற்றது.

இந்தப் பேரணியை மலையக மக்கள் மற்றும் யாழ். சிவில் சமூகம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' எனும் தொனிப்பொருளில் தலைமன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை மலையகம் 200ஐ முன்னிட்டு இடம்பெற்ற இந்நடைப்பயண நிகழ்வின் ஏழாம் நாளாக நேற்று வியாழக்கிழமை கருதப்படுகிறது.

# யாழில் 'ஈ-குருவி நடை - 2023'

*யாழ். நிருபர்*

உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்பு கூட்டும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் உருவாக்கும் வகையில் 'ஈ-குருவி நடை-2023' ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடைபயணமானது நாளை மறுதினம் (06) காலை 6.30 மணிமுதல் 9.30 மணிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பொதுநூலக முன்றிலில் ஆரம்பிக்கும் குறித்த நடைபயணமானது வைத்தியசாலை வீதியூடாக சத்திர சந்தியை அடைந்து, அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொது நூலகத்தை வந்தடையவுள்ளது.

இந்த துடிப்பான சமூக முன்முயற்சியானது உடல் - உள ஆரோக்கியத்தை மேம்படுத்த ஒவ்வொருநாளும் 10,000 காலடிகளானது விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் மதிப்பு கூட்டுவதற்கான ஆதரவை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

'ஈ-குருவி நடை-2023' ஆனது கடந்த 2020 ஆம் ஆண்டுமுதல் கனடா மற்றும் இலங்கையில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வை மேற்கொள்ளும் நடையின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடைபயணத்தில் இணைவதன் மூலம் உடல் - உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முகமாகவும், அதேநேரம், உள்ளூர் பொருளாதாரத்தின் மதிப்புக்கூட்டலை ஆதரிப்பதனூடாகவும் எங்கள் பொருண்மிய மேம்பாட்டை வலுப்படுத்தவும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறித்த நடைபயணத்தில் இணைவதற்கான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0761027092 தொலைபேசி இலக்கத்தோடு இணைந்துகொள்ளுங்கள்.

# கிளிநொச்சி புதிய பஸ் நிலையத்தின் மலசலகூட கழிவு நீரால் பயணிகள் அசௌகரியம்

*கிளிநொச்சி நிருபர்*

கிளிநொச்சியில் மத்திய பஸ் நிலையத்தின் மலசலகூட கழிவுநீர் வெளியேறி பயணிகள் பயன்படுத்தும் வெளி இடங்களில் நிற்பதனால் பயணிகள் கடும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பஸ் நிலையம் கடந்த 28.03.2023 அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது. மலசலகூடம், குளியலறை என பல வசதிகளுடன் திறந்துவைக்கப்பட்ட மத்திய பஸ் நிலையம் ஐந்து மாதங்களில் முகம் சுழிக்குமளவுக்கு மாறிவிட்டது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலசலகூடத்தின் கழிவுநீர் பயணிகளின் பாதைகளிலும் அவர்கள் பயன்படுத்தும் இடங்களிலும் வெளியேறி காணப்படுவதனாலும், மலசலகூடங்கள் முறையான பராமரிப்பு இன்மையாலும் அவை சுகாதாரமற்ற முறையில் காணப்படுகின்றன என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியாவில் சைக்கிள் - மோட்டார்சைக்கிள் விபத்து:

## இருவர் காயம்

*வவுனியா நிருபர்*

வவுனியா- ஹொரவப்பொத்தானை வீதியில் நேற்று முன்தினம் (02) இரவு 10.00 மணியளவில் சைக்கிளுடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கி முன்பாக இருந்து வீதிக்கு ஏற முற்பட்ட சைக்கிள் மீது வைத்தியசாலையிலிருந்து ஹொரவப்பொத்தானை வீதியூடாகப் பயணித்த மோட்டார்சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது

இவ்விபத்தில் இரு வாகனங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் இரு வாகனங்களையும் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர்.

# அனுமதியின்றி கிரேட்வெஸ்டர்ன் மலை உச்சியில் எவரையும் முகாமிட இடமளிக்க வேண்டாம்!

## அதிகாரிகளுக்கு மாவட்ட செயலாளர் பணிப்புரை

*டி.சந்ரு, செ.திவாகரன்*

அனுமதியின்றி தலவாக்கலை - கிரேட்வெஸ்டர்ன் மலை உச்சியில் எவரையும் முகாமிட இடமளிக்க வேண்டாமென நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, வன பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இனந்தெரியாத பெண்ணின் சடலம் கல்கந்தை மலை உச்சி சரிவுப் பகுதியில் காணப்பட்டமை தொடர்பில் லிந்துலை மற்றும் தலவாக்கலை பொலிஸாருக்கு முதலாம் திகதி மாலை தகவல் கிடைத்துள்ளது . இதனையடுத்து இனந்தெரியாத பெண்ணின் சடலம் இராணுவத்தின் உதவியுடன் நேற்று முன்தினம் (02) மாலை மீட்கப்பட்டுள்ளதையடுத்து நுவரெலியா மாவட்ட செயலாளர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பெண்ணின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்புமாறு நுவரெலியா பதில் நீதவான் ஜே. அம்பகஹவத்த லிந்துல பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். அத்துடன், இந்தச் சம்பவத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பெண் ஒருவர் சில தரப்பினருடன் மலை உச்சியை அடைந்துள்ளதாகவும் சில காரணங்களால் அவர் உயிரிழந்ததையடுத்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, கிரேட்வெஸ்டர்ன் மலை உச்சியிலிருந்து இந்தப் பெண்ணின் சடலத்தை எடுத்துவரச் சென்ற இராணுவ கோப்ரல் ஒருவரும் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

# சப்ரகமுவ மகா சமன் தேவாலய வருடாந்த எசல பெரஹெர





*இரத்தினபுரி நிருபர்*

வரலாற்றுச் சிறப்புமிக்க சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் 798ஆவது வருடாந்த எசல பெரஹெர செவ்வாய்க்கிழமை (01) இரவு வெகு விமரிசையாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

2019ஆம் ஆண்டுமுதல் வரலாற்றுச் சிறப்புமிக்க சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் எசல பெரஹெர நிகழ்வு அரசின் அனுசரணையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோல் இவ்வருடமும் குறித்த தேவாலயத்தின் எசல பெரஹெர நிகழ்வு அரசின் பூரண அனுசரணையில் இடம்பெற்றது.



இத்தேவாலயத்தின் இறுதிப் பெரஹெர நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சட்டத்தரணி நவின் திசாநாயக்க, சப்ரகமுவ மாகாண முன்னாள் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தாய்லாந்து தூதுவர் போஜ் ஹார்ன்போல் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

# பற்றைக் காட்டில் தீப்பிடிப்பு

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

பலாங்கொடை நகர சபையின் நகர சபை மைதானத்தை அண்டிய பற்றைக் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் (02) இரவு தீப்பிடித்துள்ளது.

நகரவாசிகளின் உதவியுடன் நகர சபை தீயணைப்புப்படை பொலிஸார் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். புதிய நகர அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள இப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதுடன், இரவுவேளைகளில் சட்டவிரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுவதாக நகரவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.



மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# வயல் நிலங்கள் வறட்சியால் பாதிப்பு: விவசாய அமைப்புகள் மனிதநேய உதவி

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் சமனலவெவ - உடவளவ நிலங்களின் நீர்மட்டம் வற்றியுள்ளதால் மகாவலி வலயத்தில் நெற்செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கான மனிதநேய உதவியை வழங்க விவசாய அமைப்புகள் முன்வந்துள்ளன.

சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ மற்றும் எம்பிலிப்பிட்டிய நீர்த்தேக்கத்துக்கு நீரை வழங்க முடியாதுள்ளதாகவும் அவ்வாறு நீரை வழங்கினால் நாட்டில் மின்சார வெட்டை அமுல்படுத்தவேண்டி வருமெனவும் கூறி நீர்த்தேக்கத்தின் அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். இந்நிலைமையால் மகாவலி வலய விவசாயிகள் செய்வதறியாது நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டு மொனராகலை மாவட்ட விவசாய அமைப்புகள் மகாவலி - எம்பிலிப்பிட்டிய பிரிவின் வயல் நிலங்களுக்கு பிரதேசத்திலுள்ள 11 குளங்களிலிருந்து நீரை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

வெலிஓயா அணையின் ஊடாக உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நீரை விநியோகித்து அதனூடாக நாளொன்றுக்கு 1200 ஏக்கர் அடி நீரைத் தற்காலிக தீர்வாக வழங்க அதிகாரிகள் மட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

*தலவாக்கலை நிருபர்*

ஆசிரியர் விடுதலை முன்னணி தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நாளை (5) நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.

இவ்வாறு அதன் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

வருடா வருடம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டுவரும் இந்நிகழ்வானது இந்த வருடமும் முன்னெடுக்கப்படவுள்ளது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, விசேட அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதாக என்.டி.எஸ்.நாதன் மேலும் தெரிவித்துள்ளார்.


## நிறுவன பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டு நிறுவனச் சட்ட இலக்கம் 7, பிரிவு 9 (2) இன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் நிறுவனத்தின் பெயரானது 2023 ஜூலை 19ஆம் திகதி முதல் மாற்றப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முன்னாள் பெயர்:** A.M.W. இன்ஷுவரன்ஸ் ப்ரோக்கர்ஸ் தனியார் நிறுவனம்

**புதிய பெயர்:** கொமர்ஷல் கிரெடிட் இன்ஷுவரன்ஸ் ப்ரோக்கர்ஸ் தனியார் நிறுவனம்

**நிறுவன இலக்கம்:** PV 29

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:** 165, கின்சி வீதி, கொழும்பு 08.

C.N. எதிரிசிங்ஹ,
நிறுவன செயலாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் இன்ஷுவரன்ஸ் ப்ரோக்கர்ஸ் தனியார் நிறுவனம்,**
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்,
165, கின்சி வீதி, கொழும்பு 08.

# உக்ரைனின் முக்கிய துறைமுகம் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்; 40 ஆயிரம் தொன் தானியங்கள் நாசம்

உக்ரைன்-ருமேனியா எல்லை வழியாக ஓடும் டானுபே ஆற்றின் அருகேயுள்ள இஸ்மாயில் துறைமுகம் மீது ரஷ்யா ட்ரோன்கள் தாக்குதல் மேற்கொண்டதில் துறைமுகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளதுடன்40 ஆயிரம் தொன் தானியங்களும் சேதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கியதிலிருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உக்ரைனின் போர்க்குற்ற அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேட்டோவில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைன் மீதான தாக்குதலை தொடங்கியது.

இதனை எதிர்த்து உக்ரைன், அமெரிக்கா உட்பட பல மேற்கத்தேய நாடுகளின் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளைக்



கொண்டு ரஷ்யாவை தீவிரமாக எதிர்த்து வருகிறது. இதில் இரு தரப்புகளிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டு பல அப்பாவி பொதுமக்கள் பலியாகி வருகின்றனர்.

ரஷ்ய-உக்ரைன் போர் தற்போது 527 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகின்றது. இந்நிலையில், உக்ரைன்-ருமேனியா எல்லை வழியாக ஓடும் டானுபே ஆற்றின் அருகேயுள்ள இஸ்மாயில் துறைமுகத்தை ரஷ்யா ட்ரோன்கள் மூலம் தாக்கியது.

இத்தாக்குதல்களால் 40 ஆயிரம் தொன் தானியங்கள் சேதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இஸ்மாயில் துறைமுகத்தின் கட்டமைப்பு பெருமளவில் சேதமடைந்திருக்கிறது. ''உக்ரைனின் தானிய ஏற்றுமதிக்கு ஈடாக வேறு ஒரு நாடு ஏற்றுமதி செய்ய முடியாது" என்று இந்தத் தாக்குதல் குறித்து உக்ரைன் துணை பிரதமர் ஒலெக்ஸாண்டர் குப்ரகோவ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரஷ்ய படையெடுப்பால் உக்ரைனில் 499 குழந்தைகள் உட்பட 10 ஆயிரத்து 749 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 15 ஆயிரத்து 599 பேர் காயமடைந்துள்ளனர்.

உக்ரைனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் விடுவிக்கப்பட்டவுடன் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும் என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சோபியும் நானும் பிரிகிறோம்

## 18 ஆண்டுகால மண வாழ்க்கைக்கு முடிவை அறிவித்த கனடா பிரதமர்



தனது மனைவி சோபியை பிரிவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார். இதன் மூலம் இந்தத் தம்பதியரின் 18 ஆண்டுகால மண வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

51 வயதான பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் 48 வயதான அவரது மனைவி சோபி கடந்த 2005இல் மண வாழ்க்கையில் இணைந்தனர். இந்தத் தம்பதியருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். தங்களது பிரிவு முடிவை சார்ந்து இருவரும் சட்டப்படியான ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளனர். இது குறித்து இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவொன்றைப் பகிர்ந்துள்ளார் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ.

“அனைவருக்கும் வணக்கம். சோபியும் நானும் இந்த உண்மையை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம். நீண்ட ஆலோசனைக்குப் பின்னர் நாங்கள் இருவரும் கலந்து பேசி பிரிவதாக முடிவு செய்துள்ளோம்.

நாங்கள் ஒருவருக்கொருவர் அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளோம். அது தொடரும். எங்கள் குழந்தைகளின் தனியுரிமைக்கு மதிப்புக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி” என தனது பதிவில் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

# ஹரியானாவில் வன்முறை

## 5 மாவட்டங்களில் 144 தடை; இணைய சேவை முடக்கம்; 159 பேர் கைது

ஹரியானா மாநிலம் நூஹ், பரிதாபாத் மற்றும் பல்வால், குருகிராம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, இணையத்தள சேவை முடக்கப்பட்டுள்ளது. இதுவரை கலவரம் தொடர்பாக, 159 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹரியானாவில் முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த மாநிலத்தின் ஜூலை 31ஆம் திகதி குருகிராமில், விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் ஊர்வலம் நடைபெற்றது. இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நுஹ் மாவட்டத்தை ஊர்வலம் அடைந்தபோது, ஒரு கும்பல், ஊர்வலத்தின் மீது கல் வீசியது.


கலவரக்காரர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஊர்காவற் படையைச் சேர்ந்த இரண்டு பொலிஸார், பஜ்ரங் தள அமைப்பைச் சேர்ந்த தொண்டர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர். குருகிராமில் நான்கு வாகனங்கள் மற்றும் ஒரு கடை தீக்கிரையாகின.

இந்நிலையில், ஹரியானா மாநிலம் நூஹ், பரிதாபாத் மற்றும் பல்வால், குருகிராம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, இணையத்தள சேவையும் முடக்கப்பட்டுள்ளது. இதுவரை கலவரம் தொடர்பாக 159 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து அம்மாநில உள்துறை அமைச்சர் அனில் விஜ் தெரிவிக்கையில், அனைவரும் அமைதி காக்க வேண்டும். சமூக வலைத்தளங்களில் ஆத்திரமூட்டும் பதிவுகளை வெளியிடக்கூடாது. விசாரணை நடந்து வருகிறது. 83 எவ்.ஐ.ஆர். பதிவு செய்து பொலிஸார் 159 பேரை கைதுசெய்துள்ளனர் என்றார்.

# பெண்களுக்கு ‘ஹார்ட் எமோஜி’ அனுப்பினால் சிறை - அபராதம்

## சவூதி - குவைத்தில் புதிய சட்டம்





சமூக வலைத்தளங்களில் அறிமுகமில்லாத பெண்களுக்கு ‘ஹார்ட் எமோஜி’ அனுப்பினால் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கும் வகையில் புதிய சட்டத்தை சவூதி மற்றும் குவைத் அரசுகள் இயற்றியுள்ளன.

வட்ஸ்-அப், பேஸ்புக், மெசெஞ்சர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் நம் உணர்வுகளை கீபோட் வழியே வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு எமோஜிகள் இடம்பெற்றுள்ளன. அதில் முக்கியமானது ஹார்ட் எமோஜி. காதலர்கள், தம்பதிகள், நண்பர்கள் தங்களுக்குள் அன்பைப் பரிமாறிக்கொள்ள இந்த எமோஜியைப் பயன்படுத்துவதுண்டு.

இந்நிலையில், இந்த ஹார்ட் எமோஜியை அறிமுகமில்லாத பெண்களுக்கோ அல்லது துஷ்பிரயோகம் செய்யும் நோக்கிலோ அனுப்பினால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் வகையில் புதிய சட்டமொன்றை குவைத் அரசு இயற்றியுள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால், 2 ஆண்டு சிறைத் தண்டனையும் 2000 தினார் அபராதமும் விதிக்கப்படும்.

இதேபோன்று, குவைத்தின் அண்டை நாடான சவூதியிலும் 2 முதல் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ஒரு இலட்சம் ரியால் அபராதமும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இதனைச் செய்தால் அபராதம் 3 இலட்சம் ரியால் வரை அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா, தோணிக்கல் பிரதேச தாக்குதல் விவகாரம்: சந்தேக நபர்களுக்கு தடுப்புக்காவல்

வவுனியா, தோணிக்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் அஹமட் ரசீம் உத்தரவிட்டார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற பிறந்தநாள் விழாவின்போது வீட்டுக்குள் நுழைந்த 08 பேர் கொண்ட குழு அங்கிருந்தவர்களை கூரிய ஆதங்களால் தாக்கியதுடன் வீட்டையும் தீவைத்துக் கொளுத்தியது.இச்சம்பவத்தில் 10 பேர் தீக்காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் இளம் தம்பதியினரான கணவனும் மனைவியும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இந்நிலையில், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன, பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி.அம்பாவில ஆகியோரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் வவுனியா குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர், வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் உள்ளிட்ட பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், சந்தேக நபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் நேற்றுமுன்தினம் (02) வவுனியா சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்திய பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் அன்றைய தினம் (08) மாலை ஆஜர்படுத்தினர்.

இதன்போது ஐந்து சந்தேகநபர்களையும் 11ஆம் திகதி வரை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறும் ஆள் அடையாள அணி வகுப்புக்காக 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் சந்தேகநபர்களை 11 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

இதன்போது, மன்றில் 4ஆம் சாட்சி தனது கருத்தை தெரிவிக்கமுற்பட்ட போது நீதிபதி, இன்று (02) உங்கள் கருத்தைத் தெரிவித்தால் உங்களை அனுகூலம் ஏற்படுத்த சந்தர்ப்பமாக அமையும். அதனால் 11ஆம் திகதி நீங்கள் விரும்பினால் யோசித்து உங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாள்கள், கோடரி, கத்தி, இரும்புக்கம்பி என்பன நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சந்தேகநபர்கள் சிறு நோய்களுக்கு உட்பட்டவர்கள் என்பதனால் சிகிச்சை பெற்றுக் கொடுக்குமாறும் சிறைச்சாலை வைத்திய அதிகாரியிடம் நீதிமன்றம் பணித்தது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணி அருள்மொழிவர்மன் கொன்சியஸ் ஆஜராகினார். சந்தேகநபர்களை எவ்வித துன்புறுத்தலுக்கும் உள்ளாக்காமல் அவர்களின் நலனுரித்துகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அவர்கள் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தொடர்ந்து நடத்திய விசாரணையில் குறித்த சம்பவத்தின் பிரதான சந்தே நபராகக் கருதப்படும் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் (02) மாலை கைது செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், நேற்று (03) குறித்த நபரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய சி.ஐ.டியினர் அவரைத் தடுத்துவைத்து விசாரணை செய்ய அனுமதி கோரினர். அதற்கமைய 24 மணிநேரம் தடுத்துவைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# உயிரியல் தொழில்நுட்பம் செய்முறை பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு!



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2022 (2023) உயிரியல் தொழில்நுட்ப செய்முறைப் பரீட்சைகள் ஓகஸ்ட் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். செய்முறைப் பரீட்சைகள் 77 மையங்களில் நடத்தப்படும் என்றும் கூறினார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சோதனைகள் நடத்தப்படும். உயர்தரப் பரீட்சை- எழுத்துப் பரீட்சைக்கு வராத விண்ணப்பதாரர்கள் செய்முறைப் பரீட்சையில் பங்கேற்க முடியாது.

பாடசாலை விண்ணப்பதாரர்களின் சேர்க்கைப் படிவங்கள் ஏற்கனவே அந்தந்தப் படசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் தனியார் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

www.doenets.lk இணையத்தளத்துக்குச் சென்று விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பாடசாலை விண்ணப்பதாரர்கள், விண்ணப்பதாரர் கல்வி கற்கும் பாடசாலை அதிபர் ஊடாக பாடசாலையின் பயனாளர் பெயர் மற்றும் பெயருடன் அனுமதிப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இது தொடர்பில் தகவல்கள் தேவைப்படின் 1911, 0112784208, 0112784537, 0112786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

# பாணந்துறை பிரதேச செயலாளர் கடமையேற்பு

எம்.எஸ்.எம்.முன்தஸிர்



பாணந்துறை பிரதேச செயலாளராக ஜயதேவி கொடிதுவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

விவசாய அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பதவி வகித்த இவர், பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், இவர் நேற்றுமுன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் ஏற்கனவே களுத்துறை உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



நு./அக்கரப்பத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தின் 2016 ஆம் ஆண்டு சாதாரணதர மாணவர்களினால் ஆக்ரோவா, அக்கரப்பத்தனை, ஊட்டுவில், ஹோமூட் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு ஜூனியர் தமிழனின் தரம் 5 ஆம் ஆண்டுக்கான பரீட்சை வழிகாட்டி வினாத்தாள்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

# இரு நூல்கள் அறிமுகமும் கலந்துரையாடலும்

சமூக ஆய்வாளர் பி.ஏ. காதர் எழுதிய இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம், இலங்கை மலையக தமிழ் மக்களின் மறைக்கப்பட்ட பக்கங்கள் என்ற இரு நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

தெ. மதுசூதனனின் வழிப்படுத்தலில் இடம்பெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.விஜயச்சந்திரன், கலாநிதி யசோதரா கதிர்காமத்தம்பி, சரத் அத்துக்கோரள, எழுத்தாளர் எஸ்.கே.விக்னேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

லண்டனில் உள்ள சமூகம் இயல் பதிப்பகம் இந்த நூல்களை வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விபசார விடுதி சுற்றிவளைப்பு; நால்வர் சந்தேகத்தில் கைது

ஆயுர்வேத ஸ்பா என்ற போர்வையில் இரத்மலானையில் இயங்கிவந்த விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டதில் நான்கு பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டதாக கல்கிஸை குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கல்கிஸை குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் மாலை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது விபசார விடுதியின் முகாமையாளரான ஆணொருவரும் சேவைகளுக்கு உதவிய மூன்று பெண்களும் என நால்வர் கைதுசெய்யப்பட்டனர். வெலிமடையைச் சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவரும் களுத்துறை மற்றும் பொல்பித்திகமவைச் சேர்ந்த 19, 20 மற்றும் 26 வயதுகளையுடைய மூன்று பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வெல்லாவெளியில் நடமாடும் சேவை




மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பிரதேசத்தில் வாழும் மத்திய தர வர்க்க மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நடமாடும் சேவை போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை(03) பிரதேச செயலாளர் சோமசுந்தரம் ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாலையர்கட்டு மற்றும் சின்னவத்தை பிரதேச பயனாளிகள் கலந்துகொண்டு தமது காணிகளின் உரிமம், உரித்து மற்றும் காணிகளின் ஆவணங்கள் போன்ற பிணக்குகள் தொடர்பான தீர்வைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டி.எம். ஆர்.சி.தசநாயக்க, உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன் மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக காணிக் கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# 'புதிய நெருடல்கள்' நூல் வெளியீடு

மருதமுனை செய்தியாளர்




மருதமுனை முனாஸ் எழுதிய கவிதைகளின் தொகுப்பு 'புதிய நெருடல்கள்' நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை(05) காலை 9.00 மணிக்கு பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலய மண்டபத்தில் கலைஞர் மர்ஹூம் மருதூர் வாணர் நினைவரங்கில் நடைபெறவுள்ளது.

கவிஞர் மருதமுனை ஹஸன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் முதன்மை அதிதியாக ஓய்வுநிலை அதிபர் ஏ.எல்.மீராமுகைதீன், சிறப்பு அதிதியாக புலவர்மணி ஷரிபுத்தீன், மகா வித்தியாலய அதிபர் அலியார் முகம்மட் அன்சார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ், ஆசிரியர் ஹம்ஸா மொஹிடீன், கவிஞர் எஸ்.ஏ.அப்துல் ஹப்பார் ஆகியோருடன் இலக்கிய அதிதிகளாக எழுத்தாளர் அம்றிதா ஏயெம், சிரேஷ்ட செய்தி வாசிப்பாளர் ஏ.எம். ஜெஸீம், எழுத்தாளர் எம்.எம்.நௌபல், கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர், கவிஞர்களான எம். எச்.ஏ.கரீம், உசனார் சலீம், ஜமீல், ஷியாம் நயீம், முஹமட் றாபி, ஜவ்சான் அஹமட் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

எம்.எஸ்.எம்.ஹாரிஸ், எம்.பி. அப்துல் பவ்க், ஆரிபீன் ஆதம்பாவா, ஐ.எல்.எம்.தமீம், மலீஸ் அமீன் ஆகியோர் முதன்மைப் பிரதிகளைப் பெறவுள்ளனர். புதிய நெருடல்கள் நூல் பற்றி கவிஞர்களான டீன் கபூர், அலறி, குர்ஷித் காரையான் சூதன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

# முதியோருக்கான வீட்டுத் திட்ட அடிக்கல் நடல்





கல்லடி,களுதாவளை செய்தியாளர்கள், மட்டக்களப்பு

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் முதியோர் தேசிய செயலகத்தின் நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவின் சேற்றுக்குடாவில் முதலாவது திரிய பியச முதியோருக்கான வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்காக மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி.வாசுதேவனின் மேற்பார்வையில் மாவட்ட முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் விஷ்வ கோகிலனின் ஏற்பாட்டில் சமூக சேவை உத்தியோகத்தர் பி.ராஜ்மோகன் தலைமையில் புதன்கிழமை (02) அடிக்கல் நடப்பட்டது.

அதற்கிணங்க, சமூக பாதுகாப்பு கிடைக்க வேண்டிய முதியவர்கள் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறுகின்றது.

60 வயதுக்கு மேற்பட்ட - மாதாந்த வருமானம் 6ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாகப் பெறும் முதியோருக்கான வீட்டை நிர்மாணிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு தேசிய செயலகத்தினால் 07 இலட்சம் பெறுமதியான நிதியுதவியுடன் வீட்டின் நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.

இந்நிகழ்வில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் திருமதி நிலக்ஷி நிரூஷன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.




அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் விசேட கூட்டம் அண்மையில் அக்கரைப்பற்று மெங்கோ காடனில் இடம்பெற்றது. மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட உதவி ஆணையாளர்கள் கலந்து கொண்டனர். மாவட்டத்தின் சாரணர் வளர்ச்சி, எதிர்காலத் திட்டங்கள், அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேசிய ஜம்போரி போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதுடன் ஒவ்வொரு உதவி மாவட்ட ஆணையாளர்களும் தங்களால் முடிந்த வேலைத்திட்டங்களை கொண்டுசெல்ல வேண்டுமெனவும் கூறப்பட்டது.

படம்: கோணாவத்தை செய்தியாளர்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் ஊடாக பொதுமக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய தேர்தல் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டன. 'வாக்குரிமையை பிறருக்கு விட்டுக் கொடுக்க முடியாத உரிமையாகும்' என்ற தலைப்பில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் டீ.எம்.ஆரியரெட்ண கேட்போர் கூடத்தில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கசுன் சிறிநாந் அத்தநாயக்க தலைமையில் திங்கட்கிழமை(31) இடம்பெற்றது. இதில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தேர்தல் துறையுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

படம்: நிந்தவூர் செய்தியாளர்



அட்டாளைச்சேனை ஆதார ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி ஆவணத்தை மாகாண மருத்துவத் திணைக்களத்துக்கு கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை(03) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எவ்.நஹிஜா முஸாபிர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் திருமதி ஆர்.சிறிதரிடம் ஆவணத்தைக் கையளித்தார். இதன்போது டாக்டர் எம்.ஏ.நபீல், டாக்டர் எஸ்.அப்துல் ஹை, காணி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.ரியாத், பிரதான காணி முகாமைத்துவ உத்தியோகத்தர் எஸ்.ஜே.தேவ் ஆனந்த், அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஸராபியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

படம்: திராய்க்கேணி செய்தியாளர்



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளராக மூன்றாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டமைக்காகவும் கல்வி, கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறுபட்ட சமூக சேவைகளைப் பாராட்டியும் எம்.ஐ.எம். நியாஸ் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசனால் கோணாவத்தை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வின்போது பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

படம்:அட்டாளைச்சேனை செய்தியாளர்



ஜப்பான், டோக்கியோ நகரிலுள்ள யூத் ஒலிம்பிக் நிலையத்தில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற சர்வதேச அன்ஸான் கிளஸிக் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை ICAM அபாகஸ் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இலங்கையிலிருந்து கலந்துகொண்ட 14 மாணவர்களில் ஒரு முதலிடமும் இரண்டு இரண்டாம் இடங்களும் 11 மூன்றாம் இடங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. திருமதி ஸுக்றா ஸஹ்பி மற்றும் ரீ.எம்.ஸஹ்பி ஆகியோரின் வழிநடத்தலில் இவ்வாறான வெற்றி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

படம்: நிந்தவூர் செய்தியாளர்






மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரி அதிபரின் ஆலோசனைக்கிணங்க ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சி பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது விஞ்ஞான செயல்மாதிரிகள், காட்சிப் பொருட்கள், நேரடி செயல் விளக்கம், நிழற்பட மாதிரிகள், விஞ்ஞான ரீதியான செயல் விளக்கம், முப்பரிமாணக் காட்சி உள்ளிட்ட மாணவிகளின் ஆளுமைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இக்கண்காட்சியை பிரதேசத்தின் ஏனைய பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிட்டனர். இதன்போது, மாணவிகளால் உருவாக்கப்பட்ட தயாரிப்புகளை பார்வையாளர்களுக்கு செயன்முறையில் பயன்படுத்திய அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

படங்கள்: களுதாவளை செய்தியாளர்





33ஆவது ஷுஹதாக்கள் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி இஸ்லாமிய இளைஞர் முன்னணி (IYF) இன் ஏற்பாட்டில் 10ஆவது இரத்ததான நிகழ்வு வியாழக்கிழமை (03) IYF மண்டபத்தில் நடைபெற்றது. இரத்ததான நிகழ்வானது சுமார் 10 வருடங்களாக சிறப்பாக நடைபெற்றுவருவதுடன் நூற்றுக்கும் அதிகமான ஆண்கள், பெண்கள் எனப் பலரும் இம் மனிதநேய செயற்பாட்டில் கலந்து கொண்டனர். காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கியின் ஆதரவுடனும் தள வைத்தியசாலை குருதி நன்கொடையாளர்கள் சம்மேளனத்தின் மேற்பார்வையின் கீழும் இவ் இரத்ததான முகாம் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

படங்கள்: காத்தான்குடி செய்தியாளர்

# கடமை பொறுப்பேற்பு



பெரியநீலாவணை செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று - வெல்லாவெளி பிரதேச செயலாளராக எஸ்.ரங்கநாதன் புதன்கிழமை(02) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தர அதிகாரியான இவர் 2017ஆம் ஆண்டு தொடக்கம் 06 ஆண்டுகள் அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய நிலையில், பொது நிர்வாக இடமாற்றக் கடிதத்துக்கமைய போரதீவுப்பற்று புதிய பிரதேச செயலாளராகக் கடமைப் பொறுப்பேற்றுள்ளார்.

1977ஆம் ஆண்டு பிறந்த எஸ்.ரங்கநாதன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பட்டதாரியாவார். 2006ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், ஓட்டமாவடி, செங்கலடி, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிரதேச செயலாளராகவும் மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில் நாவிதன்வெளி மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச ஓவியக் கண்காட்சியில் ஓவியர் ரமணனின் ஓவியம்



குருக்கள்மடம் செய்தியாளர்

மட்டக்களப்பு செட்டிபாளையத்தைச் சேர்ந்த ஓவியரும் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் விரிவுரையாளருமான வேதராணியம் கோகுல ரமணனின் முதலாவது சர்வதேச ஓவியக் கண்காட்சி இந்தியாவில் கொல்கத்தாவில் நேற்று முதல் இடம்பெறுகிறது.

சிறுவயதுமுதல் கலைத்துறையில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய இவர் தன்னை முழுமையாக வளப்படுத்திக்கொண்டு சிறப்புமிக்க ஓவியக் கலைஞராகத் திகழ்ந்து வருகின்றார்.

இவரது கடந்தகால தமிழர் பண்பாட்டியல் சார்ந்ததும் தமிழர் கூத்து மரபு சார்ந்ததுமான ஓவியங்கள் பலராலும் பாராட்டிப்பேசப்பட்டுள்ளதோடு பல ஓவியக்கண்காட்சிகளிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நவீனத்துவ ஓவியக்கலையில் ஈடுபாடுடைய இவர், சிங்கள மக்களிடம் சிறப்புற்று விளங்கிய தென்னங்குருத்தோலை படைப்புகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்தி பல கலைத்துவமான படைப்புகளை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான மட்டு., அம்பாறை மாவட்டத்திலுள்ள 64 அணிகள் பங்குபற்றிய மெக்ஸ் ரி 20 சம்பியன் கிண்ண சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கழகத் தலைவர் வருணாகரன் தலைமையில் களுவாஞ்சிக்குடி பொது விளையாட்டு மைதானத்தில் திங்கட்கிழமை(31) இடம்பெற்றது. இதன்போது பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் கழக உறுப்பினர்கள், புத்திஜீவிகள், வீரர்கள், கிராம மக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள்: குருக்கள்மடம் செய்தியாளர்



தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் டிக்கெட் விற்பனையை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது சாபிருக்கு இளைஞர் சேவை அதிகாரி பி.எம்.ரியாத் புதன்கிழமை (02) வழங்கி வைத்தார். இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எவ்.நஹிஜா முஸாபிர், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந்த இளைஞர் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு எதிர்வரும் 12ஆம் திகதி இலங்கை இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

படம்: திராய்க்கேணி செய்தியாளர்

# 33ஆவது ஷுஹதாக்கள் தினம் காத்தான்குடியில் அனுஷ்டிப்பு

## பிரதேசம் முழுவதும் கடையடைத்து ஆதரவு








காத்தான்குடி செய்தியாளர்

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 03ஆம் திகதி காத்தான்குடியில் இரு பள்ளிவாசல்களில் இரவு நேர வணக்கத்தில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கும் அதிகமான முஸ்லிகள் சுட்டுக்கொல்லப்பட்ட நாளை நினைவுகூரும் 33ஆவது ஷுஹதாக்கள் நினைவு நிகழ்வு காத்தான்குடி மீரா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முன்றிலில் வியாழக்கிழமை (03) நடைபெற்றது.

மேலும் இதன்போது 30 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவேண்டுமென்றும் 13ஆவது திருத்தத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற தீர்வுப் பொறிமுறையில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகளும் எதிர்பார்ப்புகளும் உள்வாங்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கத்தை வலியுறுத்தியும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லும் நோக்கில் பேரணி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காத்தான்குடி மீரா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முன்றிலில் ஆரம்பமான இவ்பேரணியானது காத்தான்குடி பிரதேச செயலகம் வரை சென்றது.


''முஸ்லிம்களுக்கான அடையாள தினமே



இன்று, முஸ்லிம் சமூகம் நாதியற்ற சமூகமா, இனப் பிரச்சினைத் தீர்வின்போது முஸ்லிம்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும், முஸ்லிம் சமூகமே விழித்தெழு'' போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியாகச் சென்றனர். மேலும், இதன்போது ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் காத்தான்குடி பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த பேரணியை காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், ஜம்இய்யதுல் உலமா, வர்த்தக சங்கம், ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம், முச்சக்கரவண்டிச் சாரதிகள், நலன்புரிச் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்ததுடன் காத்தான்குடி முழுவதும் வியாபார நிலையங்கள் மூடப்பட்டு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**தேர்தலை கேட்டு 13 ஐ குழப்பவேண்டாம் என கொழும்பு விக்கினேஷ்வரன் யாழ்பாணத்து எம்பி சொல்லிப்போட்டாரு எலுவா....? தங்கச்சிய காட்டி தமக்கய கலியாணம் கட்டுறது மாதிரி எலுவா இந்த மனிசன்ட கத இருக்கு.... கொழும்புல தமது இரண்டு புள்ளங்களையும் சிங்கள பொம்புளயலுக்கு வாழ்க்க அமைச்சு குடுத்த மகானுக்கு ரணிலுக்கு காவடி தூக்காம வேறு ஆருக்கு தூக்குவாரு....! இதுவும் சொல்வார்.... இன்னமும் சொல்வாரு....!**

# 'மாண்புமிகு மலையகம்' நடைபயணம் திருமலையில்





கிண்ணியா செய்தியாளர்

தென்னிந்தியாவிலிருந்து பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு, இலங்கையின் காடுகளாய் இருந்த மலையகத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றிய மலையக மக்கள், இன்றும் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக போராடி வருகின்றனர்.

அந்த வகையில், அவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, அவர்களது நீண்ட, நெடிய பயணத்தை நினைவுகூரும் வகையில் பல்வேறு விடயங்கள் 'மலையகம் 200' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில், 'மாண்புமிகு மலையகம்' என்ற நடைபயணம் வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட தலைமன்னாரில் இருந்து மலையகம் நோக்கி இடம்பெற்று வருகின்றது. அதில் திருகோணமலை வாழ் மக்களாக எங்களுடைய தார்மீக ஆதரவையும் அளிக்க வேண்டிய தேவை உள்ளது. அந்த அடிப்படையில் திருகோணமலை மாவட்ட சிவில் சமூக ஒன்றியத்தில் பங்கு கொள்ளும் அமைப்புகள் ஒன்றிணைந்து ஓகஸ்ட் 01ஆம் திகதியன்று தங்களுடைய பங்களிப்பை நடைபயணத்தில் வழங்கியிருந்தனர்.

இதன்போது சுமார் 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்ததுடன், முருங்கன் தொடக்கம் மடு வரையிலான பகுதியில் நடந்திருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் மலையக மக்களின் துயர், அவர்களின் உரிமைப் போராட்டம், வரலாறு தொடர்பில் பல்வேறுபட்ட விடயங்களை ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த மலையகம் சார் மக்களிடமும் அனுபவசாலிகளிடமும் அறிந்து கொண்டனர்.

பின்னர் மடு சந்திக்கு அருகிலுள்ள தேவாலயத்தில் அனைவரும் ஒன்றுகூடி மலையக மக்களின் இன்றைய நிலை தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர். மலையக மக்களின் உரிமைகள், அவர்கள் இன்று எதிர்நோக்கும் சவால்கள், இந்த நடைபயணத்தின் நோக்கம் என்பவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. மேலும் திருகோணமலையைச் சேர்ந்த அமைப்புகளின் ஒத்துழைப்பு அவர்களுக்கு கிடைத்ததை எட்டி தங்களுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்தனர். திருகோணமலை வாழ் மக்களாக மலையக மக்கள் தொடர்பில் அதிக புரிதலை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமானதாக உள்ளது.


# கிரான் பிரதேச செயலகத்தில் தொழில் வழிகாட்டல் சந்தை

கிரான் , கல்லடி செய்தியாளர்கள்

மட்டக்களப்பு, கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தொழில் வாய்ப்பற்ற இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தொழில்வழிகாட்டல் சந்தை கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில் வியாழக்கிழமை(03) இடம்பெற்றது.

கிரான் பிரதேச செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் தொழில்வாய்ப்புக்கு தேவையான உள ஆற்றலை மேம்படுத்துவது குறித்தும் நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்வது குறித்தும் எவ்வாறு தொழில்வாய்ப்பில் இணைந்துகொள்வது போன்ற விடயங்கள் தொடர்பாகவும் பிரதேச செயலாளரினால் விளக்கமளிக்கப்பட்டது.

குறிப்பாக, இலங்கை தொழில்பயிற்சி




அதிகார சபை, தனியார் உற்பத்தி நிறுவனங்கள், தாதியர் சேவை மற்றும் காப்புறுதித்துறை, நிதி நிறுவனங்கள் மேலும் பல தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்கள் நிறுவனங்களில் வேலையற்ற இளைஞர் - யுவதிகள் எவ்வாறு இணைந்து தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக்கொள்வது தொடர்பாகவும் கலந்துகொண்ட தனியார் துறையினரால் விளக்கமளிக்கப்பட்டது.

கோறளைப்பற்று தெற்கு மனிதவள வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தீசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழிற் சந்தையில் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, மாவட்ட மனிதவலு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர் அ.கருணாகரன், தொழில் பயிற்சி அதிகார சபையின் கோரகல்லிமடு நிலையப் பொறுப்பாளர், கோறளைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஒன்லைன் கடவுச்சீட்டுக்கு 931 பேர் விண்ணப்பம்

நற்பிட்டிமுனை செய்தியாளர்


அரசாங்கத்தின் ஒன்லைன் செயல்திட்டத்தின்கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகக் கிளையில் இதுவரை 931பேர் கடவுச்சீட்டைப்பெற விண்ணப்பித்துள்ளதாக இதற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், சம்மாந்துறை ஆகிய இரு பிரதேச செயலகக் கிளைகளில் இத்திட்டம் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது. குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் இணையத்தளத்துக்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பித்து திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்தபின்னர் பிரதேச செயலகத்துக்கு வருகை தரும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் கைவிரல் அடையாளங்கள் இங்கு பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் மக்கள் அதிக பயனைப்பெற்று வருகின்றனர். கொழும்பு சென்று ஆயிரக்கணக்கான ரூபாக்களை செலவு செய்து நேரகாலத்தை வீணடிக்கும் செயலுக்கு இத்திட்டத்தின்மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மத்ரஸா பொறுப்பாளர்களுக்கு இருநாள் செயலமர்வு



பெரியநீலாவணை செய்தியாளர்

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாடு செய்த முஸ்லிம் மத்ரஸா பொறுப்பாளர்களுக்கான இருநாள் செயலமர்வு சாய்ந்தமருது தனியார் விடுதியில் வியாழக்கிழமை(03) ஆரம்பமானது.

''எதிர்காலத்தில் மத்ரஸா கல்வியை வெற்றிகரமாக முன்னெடுத்தல்'' எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த விசேட செயலமர்வில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் உள்ள மத்ரஸாக்களின் பொறுப்பு அதிபர்கள், உஸ்தாதுமார் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் மத்ரஸாக்களில் எதிர்காலத்தில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் மற்றும் பாடத்திட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து வளவாளர்களாகக் கலந்து கொண்ட கலாநிதி றவூப் செயின், சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்-ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா (நழீமி) ஆகியோர் இதன்போது விளக்கமளித்தனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

கோணாவத்தை செய்தியாளர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி பொலிஸ் சார்ஜன்ட் தாஹீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்த 20 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் புதன்கிழமை(02) ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இயற்கையான வளங்கள் நிறைந்த மாகாணமாக கிழக்கு திகழ்கிறது

## சுற்றுலாத்துறை தவிசாளர் மதனவாசன்

மீனோடைக்கட்டு செய்தியாளர்

எமது நாட்டிலுள்ள எல்லா மாகாணங்களை விடவும் கிழக்கு மாகாணம் சகல வழிகளிலும் இயற்கை வளமுள்ள பசுமையான மாகாணமாக இருக்கின்றது. அதை சரியாகப் பயன்படுத்தினால் எமது பிள்ளைகள் எதிர்வரும் காலங்களில் பல அடைவுகளை அடைந்து பல சாதனைகளை நிலைநாட்ட முடியும் என கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையின் தவிசாளர் பி.மதனவாசன் தெரிவித்தார்.

பாக்கு நீரிணையை கடக்கத் தயாராகும் மாணவர்களுக்கான நீச்சல் போட்டி செவ்வாய்க்கிழமை(01) இடம்பெற்றது. இதன்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எமது நாடு கடலால் சூழப்பட்டதொரு தீவாகும். ஆனால் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்குபெறும் வீரர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எமது பிள்ளைகள் இத்துறையிலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதுபோன்ற போட்டிகள் மற்றும் பயிற்சிகளை தொடர்ந்தும் வழங்கி அவர்களை ஊக்குவித்தும் வருகிறோம்.

அத்துடன், மிக அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்து எமது நாட்டுக்கு அதிக வருவாயை ஈட்டிக் கொடுக்கின்ற மாகாணமாகவும் எமது



மாகாணம் திகழ்கிறது. அதற்கான பல திட்டங்களை திட்டமிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆலோசனை மற்றும் உதவியின் கீழ் முன்னெடுத்தும் வருகின்றோம் - என்றார்.

யானா நீச்சல் அகடமியில் பயிற்சிபெற்று வருகின்ற 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான நீச்சல் பயிற்சிப் போட்டியொன்றை ரின்கோ எய்ட் நிறுவனம் "Marine Mile Challenge" எனும் தொனிப்பொருளில் பாக்குநீரிணையை கடப்பதற்கான இரண்டாவது நீச்சல் பயிற்சிப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வுக்கு ரின்கோ எய்ட் நிறுவனத்தின் நிறுவுனர் இராஜக்கோன் ஹரிகரன், பணிப்பாளர் திருமதி தயாளினி ஹரிகரன், நிகழ்ச்சி முகாமையாளர் சங்கரலிங்கம் நவநீதன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு போட்டியில் பங்குபற்றிய வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி வைத்தனர்.

# மாணவன் துஷ்பிரயோக முயற்சி: ஆசிரியர் தலைமறைவு

பாறுக் ஷிஹான்

பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ள நிலையில், ஆசிரியர் தலைமறைவாகியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி உடற்கல்வி ஆசிரியரால் விளையாட்டு அறையில் வைத்து தரம் 09இல் கல்வி கற்கும் மாணவன் பாலியல் ரீதியாக துஷ்பிரயோக முயற்சிக்குட்படுத்தப்பட்டுள்ளதாக அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்ற மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இதுவரை இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் குறிப்பிடுகையில், குறித்த சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் பாதிக்கப்பட்ட தனது மகனிடம் இரு தடவைகள் வாக்குமூலம் பெற்றுச் சென்றுள்ளதுடன் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சி செய்ததாகக் கூறப்படும் சந்தேகநபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில், பாலியல் துஷ்பிரயோக முயற்சிக்குட் படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படும் தனது மகன் புதன்கிழமை(02) மாலை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# பிரதமர் மட்டு. விஜயம்: முன்னாயத்த கலந்துரையாடல்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பிரதமரின் விஜயத்தை முன்னிட்டு முன்னேற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் புதன்கிழமை(02) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

பிரதமரின் வருகையின்போது, மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவதற்காக கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுப்படுத்துவதற்கான பல்துறை இணைந்த பொறிமுறை தொடர்பான 'புதிய கிராமம் - புதிய நாடு' தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சி குறித்த மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக்கான கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை(04) மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பிரதமர் அலுவலகத்தின் உயர்மட்ட அதிகாரிகள், முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் தனிப்பட்ட செயலாளர் தஜீவரன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் இணைப்பாளர், மாவட்ட செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# செலான் வருடாந்த விற்பனை விருதுகள் 2022 நிகழ்வில் முன்மாதிரி செயல்வீரர்களுக்கு கௌரவம்

சாத்தியங்களுக்கு வாய்ப்பளித்தல், இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதிசார் சேவைகள் துறையின் விற்பனை சூழலை மாற்றியமைத்தல் மீதான தனது ஆர்வத்துக்கு அமைவாக செலான் வங்கி, தனது தொடர்ச்சியான 6 ஆவது வருடாந்த விற்பனை விருதுகள் 2022 நிகழ்வை பெருமிதத்தோடு ஒழுங்கமைத்திருந்தது. இந்நிகழ்வானது அண்மையில் சினமன் கிராண்ட் ஹோட்டலின் ஓக் மண்டபத்தில் நடைபெற்றதோடு, இந்நிகழ்வானது வங்கியின் விற்பனை அணிகள் மற்றும் தொடர்பு அதிகாரிகளின் தன்னிகரற்ற அடைவுகளைக் கொண்டாடுகின்ற, விற்பனை விசேடத்துவத்துக்கான அவர்களது சளைக்காத அர்ப்பணிப்பை கௌரவிக்கின்ற ஒரு நாளாக அமைந்தது.




இவ்வருடமும் வங்கியானது முன்னின்று செயற்படும் மொத்தக் குழுவினரையும் ஒன்றிணைத்திருந்ததோடு நேரடி விற்பனை அணி மற்றும் தொடர்பு அதிகாரிகள் ஆகியோரும் இதில் உள்ளடங்குவர். செலான் வருடாந்த விற்பனை விருதுகள் 2022 ஆனது "Greater Together" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றதோடு, இணைவாக்கத்தின் பலம், குழுச் செயற்பாடு, விற்பனை மற்றும் வணிகச் செயற்பாடுகளில் ஒற்றுமை என்பவற்றை வலியுறுத்தியது. இந்நிகழ்வானது சவால்களை வெற்றி கொள்ளல், தனிச்சிறப்பான பெறுபேறுகளை எட்டுதல் மற்றும் துடிப்பான விற்பனை அணியொன்றைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைந்து செயற்படுதல் என்பவற்றில் செலான் வங்கி கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் செலான் வங்கியின் வரலாற்றில் இதுவரையான அதியுச்ச இலாபத்துக்கு இவ் அணியினர் பங்களித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த முக்கியத்துவமான நிகழ்வு பற்றி கருத்துத் தெரிவித்த செலான் வங்கி பிஎல்சி உதவிப் பொது முகாமையாளர் காமிக டி சில்வா, "எமது இலக்குகளை நாம் எட்டுவதற்கும் இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதிசார் சேவைகள் துறையில் எமது நாமத்தை நிலைநாட்டுவதற்கும் எமது விற்பனை அணிகள் மற்றும் தொடர்பு அதிகாரிகளின் தளராத முயற்சிகள் இன்றியமையாதவையாக இருந்துள்ளன. அத்தோடு, தன்னிகரற்ற சாதனைகளுக்காக அனைத்து வெற்றியாளர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு ஆண்டு முழுவதுமான அவர்களது அசாத்தியமான ஆற்றல் வெளிப்பாட்டை நாம் பாராட்டுகின்றோம். கடந்த வருடத்தின் சவாலான காலப்பகுதியில் அவர்களது தன்னூக்கமானது நிகரற்றது. எமது திறமைமிக்க ஊழியர்களின் ஒன்றிணைந்த முயற்சிகளோடு, அடுத்த ஆண்டு எமக்கு மென்மேலும் சாதனைகளும் மைல்கற்களும் நிறைந்த ஆண்டாக அமையும் என நாம் நம்புகின்றோம்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வழங்கப்பட்ட சிறப்பு விருதுகளில் தொடர்பு அதிகாரிகள் மற்றும் பொறுப்பேற்றல் விற்பனை என்பவற்றுக்கான "Best of the Best" விருதுகளும் உள்ளடங்குவதோடு இவை தமக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளில் வருடம் முழுவதும் தொடர்ச்சியாக 100 மேல் ஆற்றலை வெளிப்படுத்தியோரை கௌரவிப்பதாக அமைந்தது. மதிப்பு வாய்ந்த Hall of Fame விருதானது 2022 இல் குறிப்பிடத்தக்க மாதாந்த சாதனைகளை நிகழ்த்திய மற்றும் அதியுயர் மாதாந்த அடைவுகளை வெளிப்படுத்திய தனி நபர்களை கௌரவிப்பதாக அமைந்தது.

நிகழ்வின் மிக முக்கியமான அம்சமாக மிகவும் மதிப்பு வாய்ந்த சில விருதுகளின் அறிவிப்பு அமைந்தது. அவற்றை முறையே கிருஷ்ணபிள்ளை சிவகஜன் மற்றும் ஷாமில் பெரேரா ஆகியோர் வெற்றி கொண்டனர். மேலும், மிகத் தனிச்சிறப்பான விற்பனையாளருக்கான விருதை பிரதீப் மதுஷங்க தனதாக்கியதோடு, மிகத் தனிச்சிறப்பான விற்பனைத் தலைவர் என்ற பெயரை நேரடி விற்பனைப் பிரிவின் மஹேஷ் ஏக்கநாயக்க சொந்தமாக்கினார். வெற்றியாளர்களின் தன்னிகரற்ற ஆற்றல் வெளிப்பாடு, தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றை கௌரவிப்பதாக இந்த விருதுகள் அமைந்தன.

மென்மேலும் பாரிய வெற்றிகளை ஒன்றிணைந்து எட்ட முடியும் என்பதில் செலான் வங்கி உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. செலான் வருடாந்த விற்பனை விருதுகள் 2022 ஆனது செலான் வங்கியை உச்சத்துக்குக் கொண்டு செல்லும் உறுதியான ஒற்றுமை உணர்வின் துணையோடு, ஊழியர்கள் தமக்குள் ஒன்றிணைந்து முக்கியமான வெற்றிகளைக் கொண்டாடுவதற்கு மிகப் பொருத்தமான ஒரு வாய்ப்பை வழங்கியது. திறமை வாய்ந்த, சாதிக்கும் துடிப்புள்ள விற்பனை அணியின் துணையோடு செலான் வங்கி தொடர்ந்தும் சாத்தியங்களுக்கு வாய்ப்பளித்தல், சவால்களை எதிர்கொள்ளல் மற்றும் விற்பனைக் களநிலவரங்களை மாற்றியமைத்தல் என்பவற்றினால் செலான் வங்கியினதும் அதன் மதிப்பு வாய்ந்த வாடிக்கையாளர்களினதும் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கு எதிர்பார்க்கிறது.

அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, தனது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அதியுச்ச வங்கிச் சேவை அனுபவத்தை நவீனதொழில்நுட்பம், புத்தாக்க உற்பத்திகள், குறித்த பிரிவில் அதிசிறந்த சேவை ஆகிய அம்சங்களின் ஊடாக பெற்றுத்தரும் நோக்கத்தோடு இயங்கி வருகின்றது. வங்கியோடு இணைந்துள்ள சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், சில்லறை மற்றும் கூட்டு நிறுவன வாடிக்கையாளர்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதோடு, நாடெங்கும் 540 க்கும் மேற்பட்ட அணுகல் வழிமுறைகளையும் செலான் வங்கி கொண்டுள்ளது. வங்கியின் தேசிய நீண்டகால தரப்படுத்தல் A-'(lka) ஆக மாற்றம் பெற்றிருப்பதோடு அனைத்து அம்சங்களிலும் விசேடத்துவ செயற்றிறன் வெளிப்படுத்துகையுடன் நிதிரீதியாக ஸ்திரமான ஓர் அமைப்பாக Fitch Ratings இனால் செலான் வங்கி முன்மொழியப்பட்டுள்ளது. செலான் வங்கியின் நிதிரீதியான ஸ்திரத்தன்மைக்கும் அனைத்து அம்சங்களிலும் தொடர்ச்சியான விசேடத்துவ சேவையை உறுதி செய்வதற்கு வங்கியின் சளைக்காத அர்ப்பணிப்புக்கும் இவை சான்றாகும்.

# சாலைப்பாதுகாப்பை ஊக்கப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சுடன் இணையும் Uber

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 1000 சாரதிகளுக்கு முதலுதவி பயிற்சிகளை வழங்கவுள்ளது**

மக்கள் போக்குவரத்து மற்றும் பொருட்களை கொண்டு சேர்ப்பதற்கான முன்னணி தளமான Uber இலங்கையில் சாலைப்பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கோடு இலங்கை போக்குவரத்து அமைச்சுடன் கூட்டிணைவதாக அறிவித்துள்ளது. இலங்கையில் Uber Rides மற்றும் Uber Rides ஆகியவற்றில் உறுப்பினராக இருக்கும் 1000 சாரதி பங்காளர்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் நடத்தப்படும் முதலுதவிப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இந்த பயிற்சியின் பின்னர் இந்த ஓட்டுநர்கள் விபத்துகளின் போது உடன் பயணிப்பவர்களுக்கு உயிர் காக்கும் முதலுதவி உதவியை வழங்க முடியும். CPR, கட்டுப் போடுதல் (Bandaging) மற்றும் அவசர கால நேரங்களில் காயங்களுக்கான பராமரிப்பு போன்ற முக்கியமான திறன்கள் இப்பயிற்சியில் அடங்கும்.

Uber Sri Lanka வின் Rides இற்கான இலங்கையின் முகாமையாளர் தனுஷிகா சிவநாதன்இ கொழும்பு மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் எம்.ருக்ஷான் மற்றும் ருடிநச இந்தியா மற்றும் தெற்காசியாவுக்கான கொள்கைப்பிரிவின் தலைவர் சஞ்சய் சாதா மற்றும் பலர் முன்னிலையில் 50 முச்சக்கரவண்டிச் சாரதிகளுடன் இப்பயிற்சி இன்று ஆரம்பமானது. தலைநகர் கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல பயிற்சி அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வாரங்களில் இப்பயிற்சி தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.







கௌரவ போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண அவர்கள் இது பற்றி கருத்து தெரிவிக்கையில் "இன்று ஒரு பொத்தானை அலுத்துவதன்மூலம் பயணங்களை மேற்கொள்ள முடிவதால் போக்குவரத்து இலகுவாகவும் எல்லோராலும் அணுகக் கூடியதாகவும் உள்ளது. Uber போன்ற நிறுவனங்கள் சாலைப் பாதுகாப்பை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்காற்ற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். யாருக்காவது தேவைப்படும்போது முதலுதவி அளிக்க ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலமும் போக்குவரத்து விதிகளின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்துவதன் மூலமும் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்கவும் சாலைகளை அனைவருக்கும் பாதுகாப்பானதாக மாற்றவும் அவர்கள் உதவலாம். ஓட்டுநர் பங்காளர்கள் மற்றும் விநியோக பங்காளர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு Uber நிறுவனம் மேற்கொள்ளும் முயற்சிகள் நம்மை சரியான திசையில் இட்டு செல்கின்றன."

Uber Rides Sri Lanka இன் இலங்கைக்கான முகாமையாளர் தனுஷிகா சிவநாதன் கூறுகையில், "எமது ஓட்டுநர்கள் மற்றும் சாரதி பங்காளர்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. எமது தளத்தில் பாதுகாப்பை மேம்படுத்தவும் உறுதிப்படுத்தவும் தொழில்நுட்பம் சார்ந்த அம்சங்கள் மற்றும் பிற விடயங்களில் தொடர்ந்தும் முதலீடு செய்து வருகிறோம். போக்குவரத்து அமைச்சுடனான எமது கூட்டணி இலங்கையின் சாலைப்பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மற்றுமொரு படியாகும். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் இலங்கை போக்குவரத்துப் பொலிஸாரின் ஆதரவுடன் சாரதி பங்காளர்கள் மற்றும் விநியோகப் பங்காளர்கள் முதலுதவி வழங்குவதற்குப் பயிற்றுவிக்கப்படுவார்கள். இதன்மூலம் உதவி தேவைப்படும் ஒருவருக்கு சரியான நேரத்தில் ஆதரவளிக்க முடியும்."

இலங்கையில் சாலைப்பாதுகாப்பை மேம்படுத்த Uber நிறுவனம் உறுதி பூண்டுள்ளது. கடந்த காலத்தில் 5000 ஓட்டுநர் பங்காளர்கள் மற்றும் விநியோகப்பங்காளர்கள் இலவச கண் பரிசோதனைகள் மற்றும் இலவச பார்வை திருத்தும் கண்ணாடிகளை பெற்றுக்கொள்வதற்கு Uber உதவியுள்ளது. ஓட்டுநர் பங்காளர்கள் எப்போதும் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதற்கான கல்வி வீடியோக்கள் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்களையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.இயக்கத்தின் மூலம் வாய்ப்பை உருவாக்குவதே Uber இன் நோக்கமாகும். ஒரு எளிய சிக்கலைத் தீர்க்கும் நோக்கோடு 2010 ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடங்கினோம். ஒரு பொத்தானை அழுத்தும்போது சவாரிக்கான அணுகலை எவ்வாறு பெறுவது? 25 பில்லியனுக்கும் அதிகமான பயணங்களுக்குப் பின்னர், மக்கள் அவர்கள் இருக்க விரும்பும் இடத்துக்குச் செல்ல உதவும் தயாரிப்புகளை நாம் உருவாக்குகிறோம். நகரங்கள் வழியாக மக்கள்உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய பண்டங்கள் கொண்டு செல்லப்படும் முறையை மாற்றுவதன் மூலம் Uber என்பது புதிய சாத்தியக்கூறுகளுக்கு உலகைத் திறக்கும் ஒரு தளமாக மாறியுள்ளது. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து Uber Rides இலங்கையின் 40க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு பல தயாரிப்புகளை உள்ளடக்குவதன்மூலம் தளத்தின் பாவனை அனுபவத்தை மேம்படுத்தியுள்ளது.

# எயார்டெல் ரூ. 888 Freedom Plus Unlimited பெக்கேஜின் சலுகைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன

இலங்கை இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான மொபைல் தொலைத்தொடர்பு சேவை வழங்குநரான Airtel Sri Lanka, தமது வாடிக்கையாளர்கள் செலுத்தும் பணத்துக்கு தொடர்ந்து மதிப்புச் சேர்க்கும் வகையில் எயார்டெல் அதன் முற்கொடுப்பனவான ரூ. 888 Freedom Plus பெக்கேஜில் மூன்று பிரபலமான சமூக வலைத்தளங்களின் Apps களைச் சேர்த்துள்ளது. இது அதிக மதிப்பு, சுதந்திரம் மற்றும் வரையறையற்ற அணுகலை வழங்குவதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




இலங்கை முழுவதும் வேகமாக அதிகரித்து வரும் வாடிக்கையாளர் தேவைக்கு ஏற்ப, விஸ்தரிக்கப்பட்ட 888 பெக்கேஜ் இப்போது Airtel பாவனையாளர்கள் Telegram, IMO மற்றும் Viber ஆகிய மூன்று சமூக ஊடக Apps களுக்கு வரையறையற்ற அணுகலை அனுபவிக்க வசதியளிக்கிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த எயார்டெல் ஸ்ரீலங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அஷிஷ் சந்திரா "எங்கள் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு அதிக நன்மைகளை வழங்குவதற்காக எங்களது Airtel ரூ. 888 Airtel Freedom Plus பெக்கேஜ்ஜின் நன்மைகளை அதிகரித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வாடிக்கையாளர்களிடமிருந்து எங்களுக்கு அதிக தேவை இருப்பதால் இப்போது பிரபலமான பயன்பாடுகளான Viber, IMO மற்றும் Telegram ஆகியவற்றை இந்த பெக்கேஜில் சேர்த்துள்ளோம். வாடிக்கையாளர்கள் இப்போது இந்த அதிகமான சேவைகளை மலிவு விலையில் ரூ. 888 இல் அனுபவிக்க முடியும். மேலும், அவர்கள் ஏற்கனவே இந்த பெக்கேஜ் மூலம் அதிக மதிப்பை அனுபவித்து வருகின்றனர் என்பது எங்களுக்குத் தெரியும்.

"எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற வசதியான மற்றும் மலிவான ஷாப்பிங் அனுபவத்தை வழங்குவதற்கான எமது வாக்குறுதியை நாங்கள் தொடர்ந்து வழங்குகிறோம். TikTok, Instagram, Facebook, YouTube, Messenger, WhatsApp, Viber, IMO மற்றும் Telegram போன்ற பிரபலமான சமூக ஊடக தளங்களுக்கு வரையறையற்ற அணுகலை வழங்குவதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்கள் அந்த Apps களைப் பயன்படுத்தும் முறையையோ அல்லது தனித்தனியாக கொள்முதல் செய்வதையோ மாற்ற வேண்டியதில்லை. வெவ்வேறு Apps கள். அவர்களின் தொடர்பு தேவைகளை எளிதாக பூர்த்தி செய்ய முடியும். இதனால்தான் Airtel Freedom பெக்கேஜின் மதிப்பை சந்தையில் வேறு எந்த பெக்கேஜும் ஈடுகட்ட முடியாது" எனத் தெரிவித்தார்.

எயார்டெல் 888 பெக்கேஜ் இந்த பிரபலமான சமூக ஊடக தளங்களுக்கு வரையறையற்ற அணுகலை வழங்குவதோடு மட்டுமல்லாமல் 30GB Data (1 GB/நாள் ஒன்றுக்கு) பாவனையாளர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுடன் வரையறையற்ற தொடர்பை ஏற்படுத்த வேறு எந்த நெட்வேர்க்குக்கும் வரையறையற்ற அழைப்புகள் 1,000 எயார்டெல்லில் இருந்து எயார்டெல்லுக்கு SMSs மற்றும் 30 நாட்களுக்கு வேறு நெட்வேர்க்குக்கு 50 SMSs களை உட்பட எயார்டெல்லின் பிற பிரபலமான Freedom பெக்கேஜ்களின் அனைத்து நன்மைகளும் இதில் உள்ளடங்கும்.

இலங்கையின் தொலைத்தொடர்பு சேவைத் துறையில் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட புத்தாக்கங்களில் முன்னணியில் இருக்கும் Airtel, அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் எதிர்பார்ப்புகளை விட அதிநவீன தீர்வுகளை வழங்க உறுதிபூண்டுள்ளது. அதிக நன்மைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த எயார்டெல் 888 பெக்கேஜ் வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற மொபைல் அனுபவத்தை வழங்க எயார்டெல்லின் உறுதியான நிலைப்பாட்டை பிரதிபலிக்கிறது.

வாடிக்கையாளர்களுக்கு எயார்டெல் 888 பெக்கேஜை செயற்படுத்த மற்றும் ரூ.888ஐ நேரடி ரீசார்ஜ் அல்லது My Airtel App மூலம் செயற்படுத்தி பலவிதமான சமூக ஊடக வலைத்தளங்களுக்கு வரையறையற்ற உலாவுதலை செயற்படுத்த முடிவதுடன் https://recharge.airtel.lk / மூலமாகவும் ரீசார்ஜ் செய்யலாம்.

2009 ஆம் ஆண்டில் இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் ஸ்ரீலங்கா நிறுவனம் தற்போது ஒருமில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். Airtel Sri Lanka வழங்கும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் சேவை சிறப்புகள் இலங்கை இளைஞர்கள் மத்தியில் வேகமாக பரவியுள்ளது. தற்போது Airtel இலங்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அதன் அதிநவீன 5G-தயாரான 4G வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளதுடன் அதிகபட்ச மதிப்பை வழங்குவதற்காக அதன் நெட்வேர்க் கவரேஜை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

Airtel பற்றி மேலும் அறிய MyAirtel App அல்லது சமூக ஊடகங்கள் மூலம் Airtel உடன் இணைக்கவும் அல்லது www.airtel.lk ஐப் பார்வையிடவும்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk thamilaneditor@gmail.com

## eZ Banking முகவர்கள் தற்போது டிஜிட்டல் சேமிப்பு கணக்குகளுக்கான பணவைப்புகளை மேற்கொள்ள முடியும்




இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா மற்றும் Dialog Finance PLC வழங்கும் Genie டிஜிட்டல் சேமிப்புக் கணக்குகளுக்கான பண வைப்புக்களை நாடு முழுவதுமுள்ள eZ Banking நிலையங்களில் மேற்கொள்ள eZ Banking முகவர்கள் தற்போது தேவையான உதவிகளை வழங்குவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புரட்சிகரமான இந்த eZ Banking சேவையென்பது eZ Cash தளத்தின் மற்றுமொரு சேவையாகும். நாடுமுழுவதும் இலங்கையர்களுக்கு டிஜிட்டல் நிதி அனுபவத்தில் ஒப்பில்லாத சௌகரியத்தையும் வசதியையும் வழங்குவதோடு eZ Cash நாட்டின் மிகப்பெரிய மொபைல் பண வலையமைப்பாகும். இது நாடளாவிய ரீதியில் பணப்பரிமாற்றத்தை சாதாரண மக்களுக்கு ஏற்ப இலகுவாக்கும் வகையில் இயங்குகின்றது.

Dialog Finance PLC இன் genie டிஜிட்டல் சேமிப்புக் கணக்கானது கவர்ச்சிகரமான வட்டிகளுடன் அவர்களின் மொபைலிலுள்ள genie App ஊடாக முழுவதுமாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட genie டெபிட் அட்டை மூலம் டிஜிட்டல் கட்டண செலுத்துகைகளை மேற்கொள்ளவும் பணப்பரிமற்றங்களை நிகழ்த்தவும் வழிவகுக்கிறது. eZ Banking கணக்கு உள்ளவர்களுக்கு தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள 1300 eZ Banking நிலையங்களூடாக பணவைப்பை மேற்கொள்ளமுடிவதன் மூலம் நாட்டின் மிகுந்த பன்முகத்தன்மை கொண்ட டிஜிட்டல் கணக்காக இது திகழ்கிறது.

Dialog இனால் வலுவூட்டப்படும் eZ Banking சேவையானது பிற வங்கி வாடிக்கையாளர்களின் பணம் வைப்பு செய்தல் மற்றும் மீளப்பெறல் முதலிய வங்கி பரிவர்த்தனைகளை eZ Cash விற்பனையாளர்கள் ஊடாக மேற்கொள்ள அனுமதிக்கும் ஒரு புரட்சிகரமான வங்கிச் சேவையாகும். நாடு முழுவதும் பல்வேறு விற்பனை நிலையங்களில் பரந்துவிரிந்துள்ள eZ Banking வலையமைப்பினூடாக வசதியான வங்கி சேவைகளை வழங்குகிறது. இது ஒவ்வொரு விற்பனையாளரையும் ஒரு வங்கி முகவராக மாற்றுகின்றது.

## Fitch தரப்படுத்தலால் தொடர்ந்து மூன்றாவது வருடமாக AA+ என மீள் உறுதி செய்யப்பட்டுள்ள சியெட் களனி ஹோல்டிங்ஸ்




சியெட் களனி ஹோல்டிங்ஸ் (CKH) நிறுவனம் தேசிய நீண்டகால அடிப்படையிலான தரப்படுத்தலான AA+(lka)/Stable' தகுதி நிலையை மீண்டும் பெற்றுள்ளது. தொடர்ந்து மூன்றாவது வருடமாக Fitch என்ற தகுதி நிலையை தரப்படுத்தலில் இந்த தகுதி நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் வாகனங்களுக்கான டயர் உற்பத்தியில் நாட்டில் முன்னணி வகிக்கும் நிறுவனம் மற்றும் அதன் உறுதியான நிதி நிலை என்பனவற்றை மீண்டும் பிரதிபலிக்கும் வகையில் இது அமைந்துள்ளதாக தரப்படுத்தல் முகவராண்மை அறிவித்துள்ளது.

Fitch தரப்படுத்தல் வெளியிட்டுள்ள அறிவித்தலில் "இந்த உறுதிப்பாடும் நிலையான வெளிப்பாடும் CKH ஆனது தனது விரிவாக்கல் திட்டங்கள் மற்றும் இன்னமும் பலவீனமான செயற்பாட்டு சுற்றாடல்கள் என்பனவற்றையும் தாண்டி போதுமான கடன் அளவீடுகள் மற்றும் பணப்புழக்கம் என்பனவற்றைப் பேணக் கூடியது என்ற எமது கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றது.

டயர்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடு பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளமையால். உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான போட்டியை இது அதிகரித்துள்ளது. ஆனால் CKH அதன் உறுதியான வர்த்தக முத்திரை மற்றும் விநியோக வலையமைப்பு, இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் விலைகளின் நலன் என்பன காரணமாக தனது சந்தை நிலையை தக்க வைத்துக் கொள்ளும் என்று நாம் நம்புகின்றோம்" என்று தெரிவித்துள்ளது.

AA+ Credit தரப்படுத்தலானது Fitch தரப்படுத்தலால் வழங்கப்படும் இரண்டாவது உயர் நிலை தரமாகும். ஒரு நிறுவனம் தனது நிதி சம்பந்தமான நிலைமைகள், கடமைகள் என்பவற்றை சந்திக்கும் ஆற்றல் கொண்டது என்பதை பிரதிபலிக்கும் வகையில் இது வழங்கப்படுகின்றது. சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கான முக்கியமான தரப்படுத்தல், டயர்களுக்கான கேள்விகளை திட்டமிட்ட வகையில் படிப்படியாக சந்திக்க வல்லது என்ற ஆற்றல் நிலை, புதிய சந்தைகளின் வளர்ச்சி, உறுதியான சந்தை நிலை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த தரப்படுத்தல் பற்றி கருத்து வெளியிட்ட சியெட் நிறுவனத்தின் தலைவர் சானக்க டி சில்வா, "இலங்கையின் தனிப்பெரும் டயர் உற்பத்தியாளர்கள் என்ற வகையில் கடந்த மூன்று வருடங்களாக எமது தரப்படுத்தல் நிலையில், சவால்கள் மிக்க வெளிக் காரணிகளுக்கு மத்தியிலும் மாற்றம் ஏற்படாமல் இருப்பது எமக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கின்றது. இது ஒரு தொடர் நிலைத்தன்மைக்கான குறிப்பிடத்தக்க சான்றாகவும் பங்குதாரர்கள் அனைவருக்கும் உறுதியளிக்கும் ஒரு நெகிழ்ச்சிமிக்க நிலையாகவும் வாடிக்கையாளர்களுக்கு உறுதி அளிப்பதாகவும் வர்த்தக பங்காளிகளுக்கு அதிஉயர் தரமான உற்பத்திகளை ஏற்ற இறக்கம் உள்ள சந்தை நிலையிலும் கூட இடையூறற்ற விதத்தில் விநியோகிக்கும் வகையிலும் அமைந்துள்ளது" என்றார்.

சியெட் களனியின் உறுதியான சந்தை நிலை பற்றிக் குறிப்பிட்டுள்ள Fitch "கடந்த 12 முதல் 18 மாத காலமாக நாட்டில் காணப்பட்ட பலவீனமான செயற்பாட்டு சூழலிலும் CKH தொடர்ச்சியாக அதன் சந்தைப் பங்குக்கு உரிய முக்கிய பிரிவை ஒன்றில் தக்க வைத்துள்ளது அல்லது வளர்ச்சி கண்டுள்ளது. நாட்டின் ஒட்டு மொத்த டயர் சந்தையில் CKH 40 முதல் 45 வீத பங்கினைக் கொண்டுள்ளது. இலகு ரக/கனரக வாகனங்கள் பஸ், வேன், கார் ரேடியல், மற்றும் முச்சக்கர வண்டி ஆகிய பிரிவுகளில் அது தொடர்ந்து சந்தையில் தலைமை வகிக்கின்றது. மிகத் துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் அதேவேளை பிரிவாக்கப்பட்ட ரேடியல் பிரிவில் 35 வீத சந்தைப் பங்கை கொண்டு தலைமை வகிக்கின்றது. CKH இன் உறுதியான வர்த்தக முத்திரை, விரிவான விநியோக வலையமைப்பு மற்றும் நடுத்தர விலை வகைப்படுத்தலில் அதன் கவர்ச்சி மிக்க பெறுமதி என்பன அதன் சந்தை நிலைக்கு பெரிதும் ஆதரவாக இருக்கின்றன.

இலங்கை மற்றும் இந்திய கூட்டு முயற்சிகளில் மிகவும் வெற்றிகரமானதாகக் கருதப்படும் இலங்கையில் உள்ள சியெட் களனி உற்பத்தி வளாகம் இலங்கையின் மொத்த டயர் தேவையில் அரைவாசியை உற்பத்தி செய்கின்றது. இலங்கையில் இந்த கூட்டு முயற்சியின் மீதான ஒட்டு மொத்த முதலீடு இன்றைய நிலையில் 8 பில்லியன்களாகும். இலங்கையில் இதன் உற்பத்தி செயற்பாடுகள் ரேடியல் டயர்களில் (பயணிகள் கார்கள், வேன்கள் மற்றும் விளையாட்டு நோக்கு வாகனங்கள்) வர்த்தக ரீதியான (நைலோன் மற்றும் ரேடியல்) மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் மற்றும் விவசாயப் பிரிவு வாகனங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன.

## நெல் அறுவடையில் புரட்சி ஏற்படுத்தும் Kubota DC–

Hayleys Agriculture Holdings நிறுவனம், அதன் சமீபத்திய விவசாய அறுவடை தொழில்நுட்பமான Kubota DC-93G இணைந்த அறுவடை இயந்திரத்தை பெருமையுடன் வெளியிட்டுள்ளது. பொலன்னறுவையைச் சேர்ந்த தனது பெருமைமிகு வாடிக்கையாளரான டி சரத் ஜயரத்னவிடம் முதலாவது இயந்திரத்தை 2023 ஜூலை 27ஆம் திகதி நிறுவனம் கையளித்தது. இதன் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் ஒரு மைல்கல்லை நிறுவனம் கொண்டாடுகின்றது.

அமிழ்ந்த வயல்களுக்கு ஏற்ற வகையில் செயற்படும் Kubota DC-93G இன் தன்மை, அதிக செயற்திறனுக்கான அகலமான வெட்டை ஏற்படுத்துவதற்கான அகலம் மற்றும் சேற்று நிலங்களில் சிறந்த செயற்திறன் ஆகியன இலங்கையின் வயல்களுக்கு சிறந்த அறுவடை இயந்திரமாக அமைகிறது. வயலின் நிலைமைகளைப் பொறுத்து இந்த அறுவடை இயந்திரம் உச்சபட்சமாக ஒரு நாளில் 15 ஏக்கரில் அறுவடை செய்யும் திறனைக் கொண்டுள்ளது. அதன் உறுதியான வடிவமைப்பானது, அசைக்க முடியாத நிலைக்கும் தன்மையை உறுதி செய்கிறது. இது கடுமையான சூழ்நிலையிலும் தடையின்றி அறுவடை செய்ய வழியேற்படுத்துகின்ற அதேவேளையில் நெல் அறுவடை செய்வதில் அதன் குறிப்பிடும்படியான திறனானது, ஏனைய எல்லா மாதிரிகளையும் விஞ்சி நிற்கிறது.

மேற்படி அம்சங்கள் Kubota DC-93G அறுவடை இயந்திரத்தை புரட்சிகரமானதாக ஆக்குகின்ற அதே வேளையில், உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, வேலையைக் குறைக்கும் ஒரு அதிநவீன கருவியாக செயற்பட்டு விவசாயிகளை மேம்படுத்துகிறது.

இது தொடர்பில் விவசாய உபகரணப் பிரிவின் பணிப்பாளர்/BU தலைவர் சுமித் ஹேரத் தெரிவிக்கையில்,"விவசாய சமூகத்துக்கு Kubota DC-93G இணைந்த அறுவடை இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த இயந்திரம் விவசாயப் பொறியியலின் உச்சத்தை பிரதிபலிப்பதோடு ஒப்பிடமுடியாத செயற்பாடு, செயற்றிறன் நிலைமைக்கு ஏற்ற தழுவும் திறனை வழங்குகிறது. Kubota DC-93G மூலம் விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இதன் மூலம் விவசாயிகளின் நீடித்த மற்றும் செழிப்பான விவசாயத்தை நோக்கிய பயணத்தில் அவர்களுக்கு இது உறுதுணையாக இருக்கிறது" என்றார்.

விவசாயத் துறையில் முன்னணியில் உள்ள Hayleys Agriculture Holdings Limited ஆனது, விவசாய சமூகத்துக்கு அவசியமான புத்தாக்கம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை தொடர்கிறது. Kubota DC-93G Combine Harvester ஆனது சிறந்த விவசாயத் தீர்வுகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக அமைகின்றது.








## காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்த Cordelia Cruises கப்பலுக்கு வரவேற்பளித்த Advantis



வட மாகாணத்துக்கான கடல்சார் பயணம் மற்றும் சுற்றுலாவின் புதிய சகாப்தத்தை முன்வைத்து Cordelia Cruises லிருந்து இலங்கைக்கான முதல் சொகுசுக் கப்பலான MS Empress, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தபோது (KKS) பலத்த வரவேற்பளிக்கப்பட்டது.

சொகுசுக் கப்பல் யாழ்ப்பாணத்துக்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டபோது துறைமுகங்கள்,கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா,இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கீத் பெர்னார்ட் மற்றும் Advantis குழுமத்தின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் KKS துறைமுகத்தில் வைத்து Cordelia Cruises இன் குழுவினரை சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

"யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதமான கப்பல்துறையில் MS Empress கப்பலை நேரில் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். KKS துறைமுகத்துக்கு ஒரு சொகுசு பயணக் கப்பல் வந்துள்ளமை இதுவே முதன்முறையாகும். இந்த முக்கியமான சந்தர்ப்பம் யாழ். ஒரு விரும்பப்படும் சுற்றுலாத் தலமாக வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது மட்டுமன்றி அப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஆற்றலையும் கொண்டுள்ளது.

"இந்த முயற்சியின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை விருந்தோம்பல், சில்லறை விற்பனை, போக்குவரத்து மற்றும் உள்ளூர் வணிகங்கள் உட்பட பல்வேறு துறைகளைத் தூண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலும், MS Empress அழைக்கும் மூன்று பிராந்தியங்களான ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளிலுள்ள சமூகங்களுக்கும் மிகவும் சிறப்பான தாக்கத்தை உருவாக்குகிறது" என கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.




MS Empress இன் வருகையானது Hayleys PLC இன் போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் பிரிவான Advantis குழுமம் மற்றும் இந்தியாவின் தலைசிறந்த கப்பல் வரிசைகளில் ஒன்றான Cordelia Cruises ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு முக்கிய கூட்டாண்மை மூலம் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை ஆரம்பித்துள்ளது.

"Cordelia Cruises உடனான எமது கூட்டணி இலங்கையில் புதிய பயண யுகத்தை முன்வைக்கிறது. போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் துறையில் முன்னோடியாக கடல்சார் சேவைகளில் நிபுணத்துவத்துடன் பயண மற்றும் சுற்றுலா வளர்ச்சியை உருவாக்குவதற்கான அனைத்து வாய்ப்புகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். Cordelia குழுவுடன் சேர்ந்து, அடுத்த நான்கு மாதங்களுக்குள் மட்டும் குறைந்தது 80,000 சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து, நாட்டின் பலதரப்பட்ட சலுகைகளைக் காண்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த கூட்டாண்மை குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவது மட்டுமல்லாமல், கலாசாரங்களுக்கு இடையேயான தொடர்புகளை வளர்ப்பதற்கும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் உறுதியளிக்கிறது" என Advantis குழும முகாமைத்துவப் பணிப்பாளர் ருவன் வைத்தியரத்ன தெரிவித்தார்.

MS Empress ஆனது 796 கேபின்களை ஐந்து தனித்தனி பிரிவுகளில் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் அதிநவீன வசதிகளால் நிறைந்துள்ளதுடன் அதன் 1,600 பயணிகளுக்கு இணையற்ற சொகுசு மற்றும் வசதியை வழங்குகிறது. இந்தக் கப்பல் 2023 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி சென்னை துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு தனது முதல் பயணத்தைத் ஆரம்பித்தது.

Advantis குழுமத்தின் பயண மற்றும் விமானப் பிரிவு பொது விற்பனை முகவராக பணியாற்றும் அதேவேளை Advantis குழுமத்தின் துணை நிறுவனமான Clarion Shipping இலங்கையில் Cordelia Cruises க்கான துறைமுக முகவராக செயற்படும்.

பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவுகள், மியன்மார், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவம் மற்றும் செயற்பாடுகளைக் கொண்ட அட்வான்டிஸ் இலங்கையின் மிகவும் பல்வகைப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் சேவை வழங்குநராகும். ப்ளூ-சிப் பன்னாட்டு நிறுவனமான Hayleys PLC இன் ஆதரவுடன் Advantis போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் தொழில்களில் முன்னணியில் உள்ளது. ஒருங்கிணைந்த ஏற்றி இறக்கல்கள் திட்டங்கள், பொறியியல், கடல் மற்றும் ஆற்றல், சர்வதேச சரக்கு நிர்வகிப்பு, பயணம் மற்றும் விமானப் போக்குவரத்து ஆகியவற்றை உள்ளடக்கிய ஆரம்பம் முதல் முடிவு வரையான தீர்வுகளை வழங்குகிறது.

# சிறுநீரக சத்திர சிகிச்சையின் பின் உயிரிழந்த குழந்தையின் வழக்கு விசாரணையில் திருப்பம்

## சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையை உடனடியாக விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக சத்திரசிகிச்சையின் பின்னர் உயிரிழந்த குழந்தைக்கு சிகிச்சையளித்த மருத்துவ அறிக்கைக்கமைய உயிரிழந்த குழந்தைக்கு இரு சிறுநீரகங்களும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நீதிமன்ற அறிக்கையில் குழந்தை பிறக்கும்போது அவருக்கு ஒரு சிறுநீரகமே இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு அறிக்கைகளிலுமுள்ள பரஸ்பர வேறுபாடு தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய பொரளை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (02) உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குழந்தை பிறக்கும்போது அவருக்கு ஒரு சிறுநீரகமே இருந்ததாகக் குறிப்பிட்டு குழந்தையின் உயிரிழப்பின் பின்னர் சட்ட வைத்திய அதிகாரி ரெஹுல் ஹக்கினால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொரளை பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்த சந்தர்ப்பத்திலேயே நீதவான் மேற்கண்டவாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குழந்தைக்கு சிகிச்சை செய்த சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்பட்ட சிகிச்சை அறிக்கைகளில் குழந்தைக்கு இரு சிறுநீரகங்களும் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், சட்ட வைத்திய அதிகாரி குறிப்பிடுவது போன்று எவ்வாறு நிகழ்ந்தது என்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணிகள் குழாம் நீதிமன்றத்திடம் கோரியுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த நீதவான், இந்தச் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த அறிக்கையை மாத்திரம் கருத்தில்கொள்ளாமல இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் கூறியுள்ளார்.

அதற்கமைய, குழந்தைக்கு சிகிச்சையளிக்கப் பட்டபோது மேற்கொள்ளப்பட்ட சகல வைத்திய அறிக்கைகளையும் உடனடியாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் நேற்று முன்தினம் (02) இடம்பெற்றிருந்த நிலையில், உயிரிழந்த மூன்று வயது குழந்தையான மொஹமட் பஸ்லிம் ஹம்பி பஸ்லிமின் தாயாரான, ஸ்ரீ ஞானந்த மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13 ஐச் சேர்ந்த பாதிமா ரிசானா அப்துல் காதர் (41 வயது) மரண விசாரணைகளில் முதல் சாட்சியாக சாட்சியமளித்திருந்தார்.

இதன்போது சாட்சியளித்த சாட்சியாளர், தனது குழந்தையின் இடதுபக்க சிறுநீரகத்தை நீக்குவதற்கான சத்திர சிகிச்சையின்போது, தவறுதலாக வலது பக்க சிறுநீரகம் நீக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தமக்கு அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தனது மூன்று வயது மகனின் இடது புற சிறுநீரகத்தை நீக்குவதற்கான சத்திர சிகிச்சை விசேட வைத்தியர் நவீன் விஜேகோனினால் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.அதன் போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் வைத்திய சாலையின் வைத்தியர்கள் தனக்கும் தனது கணவருக்கும் அறிவித்திருந்ததாககூம் சாட்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் மீடியா போரத்தின் பணி பாராட்டுக்குரியது

## பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம்

பொலிவேரியன் செய்தியாளர்

பாடசாலை மாணவர்களது ஊடக அறிவை மேம்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நாடளாவிய ரீதியில் ஆற்றிவரும் பங்களிப்பு பாராட்டுக்குரியது என இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம் தெரிவித்தார்.

மாவனெல்லை பதுரிய்யா மத்திய கல்லூரியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடத்திய ஊடக கருத்தரங்கில் பங்கேற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் மற்றும் கல்லூரி அதிபர் ஏ.எல்.அப்துல் ரஹ்மான் ஆகியோரது இணைத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாநிதி எம்.ஐ.எம்.அமீன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அவர் மேலும் கூறியதாவது, ஊடகங்கள் மிகவும் முக்கியமானவை. முஸ்லிம் சமூகம் என்ன செய்கின்றது என்பதை மாற்று சமூகங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். பதுரிய்யா கல்லூரியில் ஊடகக் கழகம் ஒன்று அர்ப்பணிப்புடன் செயற்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டில் எத்தனை பாடசாலைகளில் இவ்வாறான ஊடகக் கழகங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. மாணவர்களுக்கு ஊடக அறிவை ஊட்டும் பணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆற்றும் பணி பாராட்டுக்குரியது. முஸ்லிம் மீடியா போரம் நாடளாவிய ரீதியில் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றது. கருத்தரங்கில் ஊடகத்தின் நுட்பங்களை மாணவர்களுக்குப் போதித்துள்ளார்கள். முஸ்லிம் மீடியா போரம் இவ்வாறான ஊடகக் கருத்தரங்குகளை தொடர்ந்தும் நடத்தி வருகின்றது. அந்த முயற்சிக்கு தலைமை தாங்கும் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் ஒரு நல்ல பணியை செய்து வருகின்றார். அவர் எங்களுடன் நெருங்கிப் பழகுகின்றார். ஏனைய நாட்டுத் தூதுவர்களிடமும் அவர் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கின்றார்.

முஸ்லிம் மீடியா போரம் மாணவர்களின் ஊடக அறிவை மேம்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு எமது ஆதரவு என்றும் கிடைக்கும் என்றார் .

கலாநிதி எம்.சி. எம்.ரஸ்மின், தாஹா முஸம்மில், ஜாவித் முனவ்வர், அஷ்ரப் ஏ. சமட் ஆகியோர் வளவாளராகக் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் மீடியா போரத்தின் பொருளாளர் எம்.எம்.ஜெஸ்மின், உப தலைவர் எம்.ஏ.எம்.நிலாம், இணை தேசிய அமைப்பாளர் சாதிக் சிஹான், வசந்தம் மற்றும் ஐ.டீ.என்.செய்திப் பிரிவுப் பொறுப்பாசிரியர் சித்திக் ஹனீபா, சிரேஷ்ட ஊடகவியலாளர் அமீர் ஹுஸைன் உட்பட பதுரிய்யா பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஏ.ஜே.எவ்.ஜெமினா, அதிபர் ஏ.எல்.ஏ.ரஹ்மான், திருமதி சாலி ஏ.மஜீட் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இங்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் உரையாற்றும்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் இதுவரை 74 கருத்தரங்குகளை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்காக நடத்தியிருக்கிறது.

இதன்மூலம் மாணவர்கள் மத்தியிலே நாங்கள் ஊடகத்தைப் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம். அதில் நாங்கள் வெற்றியும் கண்டிருக்கின்றோம். இன்று இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் வருகை தந்திருக்கின்றார்.

பங்களாதேஷைப் பொறுத்தவரையில் ஒரு காலத்தில் வறிய நாடாக இருந்தது. இன்று அந்த நிலை மாறி அங்கே இருக்கின்ற ஆட்சியாளர் ஷேக் ஹஸீனாவின் தலைமையில் அந்த நாடு முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கை நிதி நெருக்கடியை எதிர்கொண்ட போது முதலாவதாக இலங்கைக்கு எந்த நிபந்தனைகளும் இன்றி 200 மில்லியன் டொலர் கடனை பங்களாதேஷ் வழங்கியிருக்கின்றது. எமது தாய் நாட்டுக்கு பங்களாதேஷ் செய்த உதவியை இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இதேவேளை எமது அங்கத்தவர்களுக்கு ஊடகப் பயிற்சிகளைப் பெற்றுத் தர தூதுவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.



உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் தீ மிதிப்பு உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு(02) இடம் பெற்றது. இந்நிகழ்வில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு தீமிதித்து அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.இதன்போது பாராளு மன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா,சனத் நிஷாந்த, மாவட்ட செயலாளர் ஹேரத் ஆகியோரும் கலந்து கொண்டனர். **படங்கள்:** உடப்பு நிருபர்

# சுகாதார சேவைக் கட்டமைப்பை வலுப்படுத்தும் வழிமுறையை ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

★ உலக சுகாதார ஸ்தாபன தரநிலை அளவுகோல்களுக்கு அமைய ஆய்வக வசதிகளை நிறுவுவதற்கான சட்டமூலம் தயாரிக்க ஆலோசனை

★ மருத்துவப் பொருட்களுக்காக ரூ. 30 பில்லியன் மேலதிக ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம்







மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கும் வகையில் புதிய மருத்துவ சட்டமூலத்தை ஆறு மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்து, சிறந்த சுகாதார சேவையையும் பொது நலனையும் உறுதி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய காலத்துக்கேற்ற மாற்றங்களை ஆராய்ந்து புதிய மருத்துவச் சட்டமொன்றைக் கொண்டு வருவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர், சட்ட வரைஞர் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் தலைவர் ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு செயற்படும்.

சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் சுகாதார சேவைக் கட்டமைப்பைப் பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதன்கிழமை (02) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பின்னாய்வுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் போதுமான அவசர மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 30 பில்லியன் ரூபா மேலதிக நிதியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (FDA) அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நாடுகளின் மருந்துகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை அங்கீகரிக்கும் செயல்முறையை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு அறிவுறுத்தினார். அந்த நோக்கத்துக்காக தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு அத்தியாவசிய மருந்துகள் ஒழுங்காகவும் விரைவாகவும் கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இதன் போது அறிவிக்கப்பட்டது.

தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையில் காணப்படும் பணியாளர் பற்றாக்குறை ஏற்கனவே நிவர்த்திக்கப்பட்டுள்ளது. மருத்துவ தயாரிப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும் பொதுச் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் (NMRA) பங்களிப்பை வலுப்படுத்த விரிவான அறிக்கை ஒன்றைக் கையளிக்குமாறும் ஜனாதிபதி இதன்போது அறிவித்தார்.

மருந்து விநியோகம் மற்றும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் மருந்து வகைகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிப்பது தொடர்பில் உடனடி தகவல் வழங்கும் வகையில் இணையவழி முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான எளிய மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறையை தயாரிப்பதற்காக திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

மேலும், தாதியர் ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் தற்போதைய சுகாதார சேவைத் தேவைகளுடன் இணைந்து செல்லும் வகையில் சேவை யாப்பில் திருத்தம் செய்யுமாறு சுகாதார அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கலைத்துறையில் கற்ற தகுதியானவர்களை தாதியர் பணிக்கு இணைத்து பயிற்சியளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

மேலும், மருத்துவப் பொருட்களின் தரம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை மதிப்பிடுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரநிலை 4 தரநிலைகளுடன் கூடிய ஆய்வக வசதிகளை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு மற்றும் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபை என்பவற்றுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இரண்டு வருடங்களுக்குள் காலாவதியாகும் அல்லது அகற்றப்படும் பயன்படுத்த முடியாத வைத்தியசாலை உபகரணங்களின் பட்டியலை உடனடியாக சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சுகாதார அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

அனைத்து குடிமக்களுக்கும் வலுவான மற்றும் அணுகக்கூடிய சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புகளை விரைவாக செயற்படுத்துவதற்கு இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துத் தரப்பினரும் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தினர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹேலிய ரம்புக்வெல்ல, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த, சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன உட்பட சுகாதார அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# மகாவலி காணிகளில் வசிக்கும் 15,000 பேருக்கு இம்மாதம் உறுதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை



## விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க

மகாவலி வலயத்தில் காணி உறுதிப்பத்திரம் இல்லாத 20,000 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மேலும் 15,000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் பணி இம்மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை (02) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக கால்வாய்களை சுத்தம் செய்யக்கூட நிதியொதுக்க முடியாத நிலை காணப்பட்டது.இந்நிலையில் உலக வங்கியுடன் கலந்துரையாடி நிதி அமைச்சின் ஆதரவுடன் இரண்டு திட்டங்களுக்கு 10,000 மில்லியன் ரூபா ஒதுக்க முடிந்தது.அதில் கால்வாய்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்பு மற்றும் நீர்த்தேக்கங்களை புனரமைப்பதற்கு 3,000 மில்லியன் ரூபா ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடன் அடிப்படையில் இந்த நிதி பெற்றுக்கொள்ளப்படுவதால் நீண்ட கால பயன்பாட்டைக்கொண்ட பணிகளுக்கு இதனை செலவிட அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மகாவலி வலயத்தில் வசிக்கும் ஒரு சிலருக்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாக காணி உறுதிகள் இருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக காணி உறுதிகளை வழங்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி "காணி உறுதி வீட்டுக்கே" என்ற தொனிப்பொருளில், மகாவலி காணிகளில் வசிப்பவர்களுக்கான காணி உறுதிகளை அவர்களின் வீட்டுக்கே சென்று வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் இதுவரை 20,000 காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு மேலும் 15,000 உறுதிகளை வழங்க அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது வறட்சியான காலநிலை நிலவுகின்ற பிரதேசங்களில் விவசாயத்துக்குத் தேவையான நீரை நீர்த்தேக்கங்களில் இருந்து விடுவித்தல் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளன.குறிப்பிட்ட சில நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை விடுவிக்கும்போது அது மின் உற்பத்தியைப் பாதிக்கும்.

அவ்வாறு நீரை விடுவிப்பதன் மூலம் மின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தால் நாட்டில் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலை தோன்றும் சாத்தியம் இருப்பதால் விவசாயம் மற்றும் மின் உற்பத்தி என்ற இரண்டு விடயங்களும் பாதிக்காத வகையில் இந்த சிக்கலைத் தீர்க்க முயற்சியெடுத்து வருகிறோம்.

இது குறித்து அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. அங்கு மின்சாரத்தை துண்டிக்காத வேலைத்திட்டத்துக்கு நாம் செல்ல வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (03.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 199.3123 | 212.2004 |
| கனேடியன் டொலர் | 228.2951 | 242.6660 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.0263 | 45.3510 |
| யூரோ | 335.1872 | 353.8639 |
| ஜப்பான் யென் | 2.1395 | 2.2589 |
| சிங்கப்பூர் டொலர் | 227.8807 | 241.2455 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.0848 | 410.7656 |
| சுவிஸ் பிராங் | 347.6458 | 369.8805 |
| ஐ.அ. டொலர் | 308.6091 | 322.2084 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 833.1712 |
| குவைட் | குவைட் தினார் | 1,020.4919 |
| ஓமான் | ஓமான் ரியால் | 815.8687 |
| கட்டார் | கட்டார் ரியால் | 86.2028 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 83.7224 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 85.5128 |

# வெளியேறிய பிரேசில்: புது வரலாறு படைத்த ஜமைக்கா




9ஆவது பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடர் ஆஸி. மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் நிலையில், பலம்வாய்ந்த அணியான பிரேசில் அணி லீக் சுற்றுடன் வெளியேறியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் நேற்று முன்தினம் எவ் பிரிவில் நடைபெற்ற இரண்டு போட்டிகளில் முதலில் பிரேசில் மற்றும் ஜமைக்கா அணிகள் மோதின, ஆனால், இந்தப் போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பிரான்ஸ் மற்றும் பனாமா அணிகள் மோதின, பனாமா அணியை 3-6 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணி சூறையாடியது.

இதன் மூலம் எவ் பிரிவில் பிரான்ஸ் மற்றும் ஜமைக்கா அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. இதில் உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக ஜமைக்கா அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பலம் வாய்ந்த அணியாகப் பார்க்கப்பட்ட பிரேசில் 1 வெற்றி, 1 டிரா மற்றும் 1 தோல்வி என மொத்தமாக 4 புள்ளிகள் மட்டுமே பெற்றதால் எவ் பிரிவில் மூன்றாமிடத்தைப் பெற்று தொடரிலிருந்து வெளியேறியது.

# விடைபெற்றார் உலகின் வயதான 2ஆவது உதைபந்து வீரர்



இத்தாலி உதைபந்து அணியின் மூத்த வீரரான ஜாம்பவான் ஜியான்லுஜி பஃப்போன் தனது 45ஆவது வயதில் நேற்று முன்தினம் ஓய்வை அறிவித்தார்.

தேசிய அணிக்காக 176 போட்டிகளில் விளையாடியுள்ள பஃப்போன், 754 கிளப் போட்டிகளில் விளையாடியுள்ளார். பர்மா கால்சியோ அணியில் அறிமுகமான பஃப்போன், மொத்தம் 213 போட்டிகளில் அந்த அணிக்காகப் பங்கேற்றுள்ளார்.

2006ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற இத்தாலி அணியில் கோல் கீப்பராக சிறப்பாக செயற்பட்ட பஃப்போன், செரி-ஏ சம்பியன்ஷிப் வென்ற ஜூவான்டஸ் கிளப் அணியிலும் இடம்பெற்றிருந்தார். அதிக வயதில் விளையாடிய உலகின் இரண்டாவது உதைபந்து வீரர் பஃப்போன் ஆவார். ஜப்பான் வீரர் மியூரா கசுயோஷி 56 வயது வரை ஆடி முதலிடத்தில் உள்ளார்.



கொழும்பு குதிரைப் பந்தைய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சமபோஷ சம்பியன் கிண்ண அகில இலங்கை உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் கொழும்பு சாஹிரா கல்லூரியை 1-0 என்ற ரீதியில் வீழ்த்தி கிண்ணியா மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று தேசிய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்தத் தொடரில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக வெற்றிகொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

**படம்:** கிண்ணியா நிருபர்

# விளையாட்டுத் துளிகள்

இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் ஒரு ஆஷஸ் தொடரில் அதிக சிக்ஸர்கள் விளாசிய வீரர் என்ற சாதனையை படைத்தார். 2023 ஆஷஸ் தொடர் முழுவதும் அவர் மொத்தமாக 15 சிக்ஸர்களை விளாசினார். ஒரு ஆஷஸ் தொடரில் தனிநபர் ஒருவரால் அடிக்கப்பட்ட அதிகபட்ச சிக்ஸர்கள் இதுவாகும். இதற்கு முன்னதாக, கடந்த 2005 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் கெவின் பீட்டர்சன் ஆஷஸ் தொடரில் 14 சிக்ஸர்கள் அடித்திருந்ததே தனி ஒருவரால் ஆஷஸ் தொடரில் அடிக்கப்பட்ட அதிகபட்ச சிக்ஸர்களாக இருந்தது.

மத்திய அமெரிக்க நாடான கோஸ்ட்டாரிக்காவைச் சேர்ந்த 29 வயதான ஜேஸுஸ் அல்பர்டோ லோபஸ் ஓட்ரிஸ் என்ற உதைபந்து வீரர் துரதிர்ஷ்டவசமாக முதலைக்கு இரையாகியுள்ளார். கடுமையான வெப்பம் காரணமாக ஆற்றில் நீராடச் சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தனது வாயில் கவ்விய உடல் பாகத்துடன் முதலை நீந்திச் செல்லும் போது மக்கள் அந்த முதலையை துப்பாக்கியால் சுட்டு வீரரின் உடலை மீட்டனர்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் 16 ஆவது வலைபந்து உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி விளையாடிய அனைத்து போட்டிகளிலும் தோல்வியடைந்திருந்த நிலையில், இறுதி லீக் போட்டியில் பார்படோஸ் அணியை இறுதியில் 60-56 என்ற புள்ளிகள் கணக்கில் இலங்கை அணி வெற்றிபெற்றது.

ஆஷஸ் தொடரின் போது மெதுவாகப் பந்து வீசியதற்காக இங்கிலாந்து அவுஸ்திரேலியா ஆகிய இரு அணிகளுக்கும் ஐ.சி.சி யினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் அவுஸ்திரேலியாவுக்கு 10 புள்ளிகளும், இங்கிலாந்துக்கு 16 புள்ளிகளும் குறைக்கப்பட்டன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# எல்.பி.எல். ஆரம்ப விழா தேசிய கீத சர்ச்சை : மன்னிப்புக் கோரிய பாடகி



கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான 2023 லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் ஆரம்ப நிகழ்வின் போது நாட்டின் தேசிய கீதத்தின் பொருள் மாறுபட இசைத்தமைக்காக பாடகி உமாரா சிங்கவங்ச மன்னிப்புக் கோரியுள்ளார்.

தாம் ஒருபோதும் நாட்டின் கீர்த்திக்கும், தேசிய கீதத்தின் பெருமைக்கும் பாதிப்பை ஏற்படுத்த விரும்பியதில்லை என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், நாட்டின் பெருமையை பாதுகாப்பதற்கும் தேசியக் கொடியை சுமப்பதற்கும் எப்போதும் பெருமைகொள்வதாகவும் பாடகி உமாரா வீரவங்ச அறிக்கையொன்றை விடுத்து குறிப்பிட்டுள்ளார்

# யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி உதைபந்து தொடரில் சம்பியன்

யாழ். நிருபர்





யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம், இலண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையில் மாகாண ரீதியில் நடைபெற்ற 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியில் உதைபந்து தொடரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது.

அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

தொடரின் சிறந்த வீராக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் இணைத் தலைவரான ஏ.ஜே ஜெறோம் தெரிவு செய்யப்பட்டார். போட்டிகளுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் கலந்துகொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும், வெற்றிக்கிண்ணத்தையும் வழங்கினார்.

# சொந்த கோலால் இத்தாலிக்கு சோகக்கதை



பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரில் குழு ஜி யில் இடம்பெற்றுள்ள இத்தாலி மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. போட்டி ஆரம்பித்த பதினோராவது நிமிடத்திலே கோலடித்த இத்தாலி அணி, சிறிது நேரத்தில் இத்தாலி அணி வீராங்கனையான பெனெடெட்டா ஓர்சி துரதிர்ஷ்டவசமாக தன் பக்கமே சொந்த கோலடிக்க போட்டி 1-1 என சமமானது.

அடுத்து இரண்டாவது பாதியில் தென்னாபிரிக்கா இரண்டு கோலும் இத்தாலி ஒரு கோலும் அடிக்க போட்டியின் இறுதியில் தென்னாபிரிக்க அணி 3-2 என வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. இத்தாலி அணி அடித்த சொந்த கோலால் இந்தப் போட்டியில் தோற்று உலகக்கிண்ணத்திலிருந்து வெளியேறியது. இதே குழுவில் ஆர்ஜென்ரீன அணியும் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய போட்டிகள்

LPL T20 LANKA PREMIER LEAGUE 2023

**கண்டி எதிர் தம்புள்ள** (பி.ப - 3.00)

**காலி எதிர் ஜவ்னா** (இரவு - 7.00)



அல் - ஹுசைனிய்யா விளையாட்டுக் கழகம் நடத்திய அல்-ஹுசைனிய்யா கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் (23 வயதுக்குட்பட்ட) ஒலுவில் நைட் ரைடர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

**படம்:** அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

# தர்கா நகர் அல்-ஹம்றா கடினப்பந்து கிரிக்கெட்டில் கால் பதிப்பு



அட்டப்பள்ளம் செய்தியாளர்

125 வருட வரலாறு கொண்ட தர்கா நகர் அல் - ஹம்றா மகா வித்தியாலயத்தில் முதன் முறையாக கடினப்பந்து கிரிக்கெட் ஆரம்பிக்கப்பட்டு அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தில் 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள் ஏ மற்றும் பி அணிகளாக மொத்தம் 26 வீரர்கள் பதிவு செய்யப்பட்டனர்.

களுத்துறை மாவட்டத்தில் பிரபல அணியாகத் திகழும் திஸ்ஸ மத்திய கல்லூரி அணியுடன் விளையாடிய அல்-ஹம்றா மகா வித்தியாலய அணி வரலாற்று மிகு வெற்றியை தன்வசப்படுத்திக் கொண்டது. மேலும், களு./ வேலாபுர மகா வித்தியாலய அணியுடனான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

குறுகிய மூன்று மாத காலத்திற்குள் பயிற்சிகளைப் பெற்று தங்களது திறமைகளை வெளிக்காட்டியதோடு, அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் சகல துறை ஆட்டக்காரருமான ஆதிஃப் அஹமட் களுத்துறை மாவட்ட கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்காக முன் நின்று பாடுபட்ட பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் பஸீன் பாரூகின் விடா முயற்சியும் அவருடன் உறுதுணையாக இருந்த பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் டாக்டர் இஹ்ஸான் ஹரீஸ் மற்றும் விளையாட்டுக் குழுவின் உறுப்பினரான ஷிமாக் தஸ்லீம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர், உபசெயலாளர், உப பொருளாளர் உட்பட அனைத்து உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பு இவ்வெற்றிக்கு பாரிய துணையாக இருந்தது.

மேலும், கிரிக்கெட் விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்களான முஹம்மட் ரிஸான் மஹ்ரூப் மற்றும் எம்.எம். ஆசிக் ஆகியோரது ஒத்துழைப்பும் பயிற்றுவிப்பாளர் அரவிந்த அமரசேகர உப பயிற்றுவிப்பாளர் டிமெல் தக்ஷின் ஆகியோரின் சிறந்த பயிற்சியும் வீரர்களின் வெற்றிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்ததாக பாடசாலையின் அதிபர் திருமதி பஸ்லியா பாஸி தெரிவித்தார்.

# கிளிநொச்சி - மன்னார் மோதவுள்ள நட்புச்சமர் கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடர் நாளை ஆரம்பம்

மன்னார் நகர் நிருபர்

மன்னார் ஏ.ஏ சுப்பர் கிங்ஸ் அணியினரும் கிளிநொச்சி யுனைட்டெட் அணியினரும் நட்பு ரீதியில் மோதவுள்ள கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரானது நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

மூன்று ரி 20 போட்டியும் இரண்டு 50 ஓவர்களைக் கொண்ட போட்டியுமாக மொத்தம் ஐந்து போட்டிகள் ஓகஸ்ட் மாதம் 5 ஆம், 6ஆம் மற்றும் 12ஆம்,13ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

மன்னார் மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்கள் மத்தியில் கிரிக்கெட் மீதான ஆர்வத்தையும் பயிற்சியையும் வழங்கும் முகமாக குறித்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெறவுள்ளது. கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள குறித்த சுற்றுப் போட்டியில் மைதானத்துக்கு வெளியில் அடிக்கப்படும் சிக்ஸர்களை பிடியெடுக்கும் பார்வையாளர்களுக்கு 500 ரூபா பணப் பரிசிலும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்காக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7